V. 4. No. 2
187151

1407

Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 4—No. 2.

13 MAR 1931

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

| மலர் ச | பிரமோதூத ஆண்டு மாசித் திங்கள்<br>1931 ௵ பிப்ரவரி௴ | இதழ் உ |
|---|---|---|

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| மாசிக் கடலாட்டு ... ... ... | ௪௧ |
| கடவுளருள் ... ... ... ... | ௪௪ |
| தூத்துக்குடி சபை நிகழ்ச்சி வரலாறு ... ... | ௪௮ |
| சிவானந்த போதம் ... ... ... | ௫௧ |
| ஞானதீக்ஷாவிதி ... ... ... | ௫௪ |
| போஜனவிதி ... ... ... | ௫௫ |
| ஞான பூசாகாரணம் ... ... ... | ௫௭ |
| திருவிசைப்பா ஆசிரியர்கள் ... ... | ௬0 |
| சமாஜ இருபத்தாறும் ஆண்டு உத்தியோகஸ்தர்கள் ... | ௬௨ |
| சைவ சித்தாந்த மகா சமாஜப் புதிய அமைப்பும் விதிகளும் ... ... ... | ௬௫ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,

உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1931 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.

தனிப் பிரதி அணா 3.

# மதிப்புரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெரிய புராணக் கதைகள் ... | (முதல் வரிசை) | ... விலை அணா | 4. |
| பெரிய புராணச் சுருக்கம் ... | (முதற் பகுதி) | ... ,, | 13. |
| கந்த புராண வசனம் ... | (உற்பத்தி காண்டம்) | ... ,, | 10. |
| திருநாவுக்கரசர் ... | ... ... ... | ... ,, | 12. |
| திருஞானசம்பந்தர் ... | ... ... ... | ... விலை ரூபா ஒன்று. | |

இவ்வைந்து புத்தகங்களும் நமது பார்வைக்கு வந்தன. இவைகள் சென்னைத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றன. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் அவர்களால் வெளியிடப்பட்டன. மயிலாப்பூர் வெள்ளியம்பல உபாத்தியாயர் குமாரரும் கல்வி இலாகாவில் உத்தியோகஸ்தரா யிருந்தவருமாகிய தமிழறிஞர் திரு. சே. சிவஞானம் பிள்ளையவர்கள் இந்தப் புத்தகங்களின் ஆசிரியராவர். இவருடைய சமயப்பற்று, மொழிப்பற்று முதலியவற்றைத் தமிழ் நாடு நன்கறியும். இந்த புத்தகங்கள் பல ஜில்லாக்களில் பற்பல பாடசாலைகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஆறு நாயன்மார்கள் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சிறு பிள்ளைகள் உணரும் வகையில் மிக அழகாக நல்ல போதனை முறையில் கூறுவது முதற் புத்தகம். ஒன்பது நாயன்மார்கள் சரித்திரத்தைக் கூறிச் சாரமான பெரிய புராணச்செய்யுள்களோடு இடையிடையே வசனத்தைச் சேர்த்து மேல் வகுப்புப் பிள்ளைகட்குப் பெரிய புராணத்தை முழுமையும் படிக்கவேண்டும் என்ற ஆவலை ஊட்டக்கூடிய அரிய முறையில் எழுதப்பெற்று பலவரிய குறிப்புக்களோடு மிளிர்வது "பெரிய புராணச் சுருக்கம்." இவ்வரிய முறையிலேயே "கந்தபுராண வசனம்—உற்பத்தி காண்டமும்" எழுதப்பெற்றிருக்கிறது. "திருநாவுக்கரசர்" "திருஞான சம்பந்தர்" என்ற இரண்டு நூல்களும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளேயன்றி மூதறிஞரும் வாசித்தற்குரியன. இருபெருஞ் சமய குரவர்கள் சரித்திரங்களைக் கூறுவதோடமையாது, இந்நூல்கள் கால ஆராய்ச்சி, அற்புதங்கட்கு அகச்சான்றுகள், அக்காலத்திருந்த நாயன்மார்கள் எவரெவர் என்பவற்றுக்குச் சான்றுகள், தேவார நுதலிய நுண்பொருட்கோவை முதலிய மிக அரிய பகுதிகளையும் கொண்டுள்ளன. முறையாகத் தேவாரத்தைப் படித்தவர்கள் குறித்து வைக்கும் தொகுப்பேடுபோல் (Nc book) இந்நூல்களிரண்டையும் கொள்ளலாம். சமயப்பற்று, மொழிப்பற்றுடைய ஒவ்வொருவரும் இந்நூல்களை வாங்கி வாசிப்பது அவசியம்.

**Chidambara Rahasyam Revealed** (சிதம்பரரஹஸ்ய விளக்கம்):—விலை ரூபா ஒன்று. சென்னை இராயப்பேட்டையில் வசிக்கும் "ரிபூரிபார்மர்" பத்திராசிரியர் D. கோபால் செட்டியார் அவர்கள் ஆங்கிலத்தில் இயற்றிய நூல். இவ்வாசிரியர் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மேல் நாட்டு ஸ்வீடன்பர்க் என்ற தத்துவஞானியின் கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பல நுட்பங்களை விளக்கிவரும் பெரியார். ஸ்வீடன்பர்க் கூறும் (Science of Correspondence) அண்டபிண்ட ஒற்றுமையியல் என்பதின் துணைகொண்டு இவ்வாசிரியர் சிதம்பர ரஹஸ்யத்தை விளக்குகின்றனர். இந்நூல் புதிய முறையில் செவ்வையாக எழுதப்பட்டுள்ளது.

**மகான் அரவிந்தகோஷ் மனைவியாருக்கெழுதிய கடிதம்**:—இச்சிறு நூலில் இல்லற நுட்பம், தெய்வபக்தி, தேசபக்தி முதலிய பல பொருள்கள் பொதிந்துள்ளன. வேண்டுவோர் இரண்டணா தபால் பில்லை யனுப்பி சிந்தாதிரிப்பேட்டை, "லோகோபகாரி" ஆபீஸில் பெறுக.

**என் புலால் மறுத்தல் வேண்டும்**:—விலை அணா 6.

**Superionty of Vegetarian Diet from the Scientific and Hygienic Stand-point**:—விலை அணா 8. இந்த இரண்டு நூல்களும் சென்னைப் புலால் மறுத்தல் சங்கத்தின் வெளியீடுகள். இவற்றுள் முதல் நூல் தமிழில் ஷ சங்கச் சொற்பொழிவாளர் திரு. இளவழகனார் அவர்களால் இயற்றப்பட்டது; எட்டு அதிகாரங்களில் ஊனுணவின் தீங்கையும் மரக்கறியுணவின் மேன்மையையும் மிகச் செவ்வனே விளக்குகின்றது. ஊனுண்போருடனே வாங்கிப் படித்துத்திருந்த வேண்டும். மரக்கறியுணவே கொள்வோர் வாங்கி வாசித்து ஊனுண்போரைத் திருத்தவேண்டும். எனவே அனைவரும் தவறாமல் இந்நூலை வாங்கி இச்சங்கத்துக்குதவி புரிவது மிக அவசியம். இரண்டாவது நூல் ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளது. அறிவியல் துறை, சுகாதாரத் துறைகளில் ஆராய்ந்தாலும் மரக்கறியுணவே மேம்பட்டது என்பதை விளக்குவதற்குப் போட்டிப் பரிசுக் கட்டுரைகளை அழைத்த இச்சங்கத்தினர் அப்போட்டியில் பரிசுபெற்ற இக்கட்டுரையை வெளியிட்டுள்ளனர். இதை ஆக்கியோர் திரு. S. A. அசாய்யா, பி. ஏ., பி. எல்., அவர்கள். இதைக் கேவலம் ஒரு கட்டுரையென்று எண்ணுதல் தவறு. உணவாராய்ச்சி செறிந்த நூல் என்றே இதைக்கொள்ள வேண்டும். ஊனுணவின் கூறுகளையும் மரக்கறியுணவின் கூறுகளையும் விளக்கி ஊனுணவின் தீங்கையும் மரக்கறியுணவின் நன்மையையும் திறம்பட இந்நூல் கூறுகின்றது. ஆங்கிலம் கற்ற ஒவ்வொருவரும் இந்நூலை வாங்குவது அவசியம். இவ்விரண்டு நூல்களையும், காரியதரிசி சென்னைப் புலால் மறுத்தல் சங்கம், தாரக விலாசம், கத்தீட்ரல் போஸ்ட், சென்னை, என்ற விலாசத்துக்கெழுதிப் பெறுக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு"

| மலர் ௪ | பிரமோதூத ஆண்டு மாசித் திங்கள் 1931 ஆம் பிப்ரவரி மீ | இதழ் ௨ |
|---|---|---|

## மாசிக் கடலாட்டு

[பத்திராசிரியர்]

சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் தலங்கள் பலவற்றில் மாதத்துக் கொருமுறை ஏதாவது ஒரு பெருவிழா நடப்பது வழக்கம். நக்ஷத்திரத்தை யொட்டியோ இன்றேல் திதியையொட்டியோ அது வரும். அவ்விழாக் காலத்தில் சந்திரசேகர மூர்த்தியையோ, அல்லது பஞ்ச மூர்த்திகளையோ அபிடேகாதி அலங்கார சோடசோபசாரங்கள் செய்வித்துத் திருவீதிவலம்வரச்செய்தல் தொன்றுதொட்டு நடைபெறும் நல்வழக்கமா யிருந்துவருகிறது. இத்தகைய மாத விழாக்கள் பலவற்றைத் தொகுத்து, திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமயிலாப்பூர் பூம்பாவைத் திருப்பதிகத்தில் மிகஅழகாக அருளிச்செய்துள்ளார். அப்பதிகத்தில் முறையே இரண்டுமுதல் ஏழுவரையுள்ள பாசுரங்களில், "ஐப்பசியோணவிழா," "தொல் கார்த்திகை நாள்.......விளக்கீடு," "ஆதிரைநாள்," "தைப்பூசம்" "மாசிக்கடலாட்டு," "பங்குனி யுத்திரநாள் ஒலிவிழா" என்ற விழாக்களைக் "காணாதே போதியோ பூம்பாவாய்" என்ற குறிப்புக்கள் வருகின்றன. இவைமுறையே விஜயதசமி (இக்காலத்தில் இது பெரும்பான்மை புரட்டாசி மாதத்திலும் சிறுபான்மை ஐப்பசி யோணத்திலும் வருகின்றது), கார்த்திகைதீபம், மார்கழி ஆருத்திரா தரிசனம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி யுத்திரம் என்ற விழாக்களைக் குறிக்கின்றன. இவ்விழாக்கள் ஐப்பசிமுதல் பங்குனிவரை மாதத்துக் கொன்றாகத் தொடர்ந்து வருதல் நோக்கத்தக்கது. இவைகளே யன்றி இப்பதிகத்தில் முதல், எட்டு, ஒன்

பது, பத்தாம் பாசுரங்களில் முறையே அட்டிட்டல் (வனபோஜன விழா), அட்டமிநாள், பொற்றுப்பு (பொன்னூசல்), பெருஞ் சாந்தி (கும்பாபிஷேகம் குடமுழுக்கு) என்ற விழாக்கள் மாதங்கள் குறிக்கப்படாமல் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் அட்டிட்டல் என்ற வன போஜன விழா, சென்னையிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள சிவாலயங்கள் விஷ்ணுவாலயங்களில் தை மாதத்தில் சௌகரியமான ஒரு ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறுகின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் காலத்தில் இவ்வாறே யிருந்ததுஎன்று கூறுவதற்கு ஏதுவில்லை. பதிகத்தின் இரண்டாம் பாட்டிலேயே ஐப்பசியோண விழாவை முன்வைத்து அவ்வோண விழாவின் பின்னர் முறையே கார்த்திகைமுதல் பங்குனிவரை மாத விழாக்களைக் கூறுகின்றாராகையினால், இவ்வட்டிட்டல்விழா புரட்டாசிமாதத்தில் நிகழ்ந்திருக்கக் கூடும். பங்குனியுத்திரத்தின் பின்னர் அட்டமிநாள், பொற்றுப்பு, பெருஞ் சாந்தி என்ற விழாக்களை வைத்துள்ள அமைப்பிலிருந்து ஒருக்கால் சித்திரையில் சுக்கிலாஷ்டமி அல்லது கிருஷ்ணாஷ்டமியையும், வைகாசியில் (நல்ல வேனிற்காலத்துக்குப் பொருத்தமான) பொன்னூசல் விழாவையும், ஆனியில் (அதாவது கோடையினிறுதியில்) பெரியதொரு கும்பாபிஷேகத்தையும் (மண்டலாபிஷேகம் என்று ஒவ்வோராண்டிலும் கோடையிறுதியில் திருப்புள்ளிருக்குவேளூர் என்ற வைத்தீசுவரன் கோயிலில் ஒரு சிறந்தவிழா நாளைக்கும்நடைபெறுகின்றது) புகலிவேந்தர் குறித்தனரோ வென்ற ஐயம் ஒருபால் தோன்றுகின்றது. விழாமுறை ஆராய்ச்சி[illegible]ர்கள் விளக்குதற்குரிய பொருள்கள் பலவற்றுள் மேற்கூறியனவும் அடங்கும்.

இவ் விழாக்களுள் மாசிக்கடலாட்டைப்பற்றிச் சிறிது சிந்திப்பாம். இந்தியாவில் ஈசானச்சூல், நிருதிச்சூல் (N. E. Monsoon, S. W. Monsoon என்ற இரண்டு பெரு மழைக் காற்றுக்கள் ஒவ்வோராண்டிலும் பல மாதங்கள் அடிப்பதுண்டு. இந்தியாவின் ஒவ்வொரு பகுதியில் சிற்சில மாதங்கள் இவை மிக்க வலியுடையனவாக விருக்கும். பொதுவாக இவற்றின் ஆயுள் ஏப்ரல் மாதமுதல் ஜனவரி ஈறுகவுள்ள காலப்பகுதி யென்னலாம். எனவே இவ்விரு சூல்களும் பீடிக்காத மாதங்கள் பிப்ரவரி,மார்ச்சு மாதங்களேயாம். அதாவது தையில் பிற்பாதியும், மாசியும், பங்குனியில் முற்பாதியும் அடங்கிய ஒரு காலப்பகுதி. இதிலிருந்து மாசிமாதம் ஒன்றே பெருமழைக் காற்றினால் வரும் துன்பத்துக் கிடமாகாத அமைதியான முழுமாதம் என்பது பெற்றும். பெரு மழைக் காற்றடிக்கும் காலத்துக் கடலில் அலைகள் உயர்ந்தும் நெருங்கியும் வலியுற்று மிருக்கும். கடலில் முழுகுவது துன்பத்துக் கிடமாகும். எனவே, அக்காற்றில்லாத காலத்தே கடலில் மக்கள் முழுகுவது எவ்வகையான துன்பத்தையும் விளைவியாது இன்பத்தையே தரும். ஆகையாற்றான் பண்டைக் காலத்தில் ஆலயங்களில் உத்ஸவாதிகளைத் தொடங்கிய பெரியோர்கள் கடலாட்டுத் திருநாளை மாசி மாதத்தில் வைத்தனர். எந்தமாதத்திலும் முழுமதிநாள்(பௌர்ணிமை) ஒன்றே முழு இன்பத்தைத் தருவது. ஒவ்வொரு மாதத்திலும் அந்நாளே சிவபெருமானுக்கு (இன்ப வடிவானவனுக்கு) மிகவும் உகந்தது.

187151



சிவபூசை செய்வோர் பௌர்ணிமை தினங்களில் உரிய அபிடேகப்பொருள்களைச் சேகரித்து (இவை மாதத்துக் கொன்றாக மாறுபடும்) சிவலிங்க மூர்த்திக்கு அபிடேகாதி வழிபாடுகள் செய்வர். எனவே மாசிமாதத்திலும் பௌர்ணிமை தினமே மிகச் சிறந்தது. மாசி மாதம் பௌர்ணிமையில் பெரும்பான்மை மக நக்ஷத்திரம் கூடியிருக்கும். இக்காரணம் பற்றியே இம்மாதத்துக்கும் மாசி (மாகி, மக சம்பந்தமுடையது) என்றபெயர் வந்திருக்க வேண்டும். ஆகையால் உலக வழக்கில் இக்கடலாட்டுத் திருநாள் மாசி மகத்தில் வருவதாகக் கூறுவதுமுண்டு.

தைப்பூசத்தில் தெப்போத்ஸவம், மாசி மகத்தில் கடலாட்டு என்று அடுத்து அடுத்து இரண்டு நீர்நிலை பற்றிய உத்ஸவங்களை வைத்துள்ள அமைப்பைச் சிறிது நோக்குவாம். தெப்பம் கண்டப் பொருள். அதாவது இத்தனையடி நீளம், இத்தனையடி அகலம் என்ற அளவுக்குட்பட்ட ஒரு பலகை. அப்பலகையின்கீழ் மிதப்பதற்குரிய சாதனங்களை ஒருங்குசேர்த்து அப்பலகையின்மீது சிவபெருமானை எழுந்தருளச் செய்து திருக்குளத்தில் வலம் வருவித்தல் தெப்போத்ஸவமாகும். திருக்குளமும் ஒரு கண்டப் பொருளே. இத்தனைகஜம் நீளம், இவ்வளவு அகலம் என்ற வரம்புக்குட்பட்டு காணக்கூடிய நான்கு எல்லைகளையும் படித் துறைகளையும் இவ்வளவுதான் என்று கணக்கிடக் கூடிய தண்ணீரையும் உடையது குளமெனப்படும்.

கடல் அவ்வாறல்ல. பூகோள சாத்திரம் அறிந்தவர்கட்கு இத்தனைமைல் நீளம் அகலம் இத்தனை அடி ஆழம் என்ற விவரங்கள் தெரிந்துள்ளபடியால் ஒவ்வொரு கடலையும் அவர்கள் கண்டப் பொருளாகவே கொள்ளலாம். ஆயினும் கரையிலுள்ள பெரும் பொருள்களை நோக்கக் கடல் அகண்டப் பொருளே; கண்ணுக்கெட்டாத அகலமும் நீளமும் உடையதாகலான் காட்சியளவையால் அளப்பரிய அகண்டப் பொருளே.

தெப்போத்ஸவத்தில் கண்டப் பொருளாகிய குளத்தில் இறைவனும் இறைவியும் வலம்வருவதைக் காணும் அறிவுடைய மக்கள் "பைங்குவளைக் கார்மலரால்" என்ற திருவெம்பாவைச் செய்யுளின் உட்கருத்தை நினைவுக்கு வருவித்து, சைவசமய நுட்பங்களில் கூர்ந்த மதிபெற்றோர்களாகத் துலங்குவர். கடலாட்டைக் காணும் அவ்வறிஞர் கடலை அகண்டாகாரப் பரசிவத்தின் அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகக் காண்பர். "கனலைக்காற்றைக் கனைகடலைக் கலந்து நின்ற பெரியானை" என்பது அப்பர் தேவாரம். அறிவுக்கடல், அன்புக்கடல், இன்பக்கடல் முதலிய இறைவன் எண்குணக் கடல்களாகவே இக்கடலையும் காண்பர். இக்கடலினின்றும் எழுகின்ற செங்கதிர் துலக்கும் இளஞாயிற்றை இறைவனது "அரும்பித்த செஞ்ஞாயிறேய்க்கும்மடி, அழகெழுதலாகாத வருட்சேவடி" யாகவும் (அப்பர் தேவாரம்), "உலகமுவப்ப வலனேர்புதிரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு, ஓவற விமைக்கும் சேண் விளங்கவிரொளி" யாகவும் (திருமுரு காற்றுப்படை) காண்பர். கடலாட்டு விழாவைக் காண்போர் இன்ப வெள்ளத்துள் திளைத்து நிற்பர் என்பது "அடிகளடி பரவி கடலாடல் காணாதே போதியோ பூம்பாவாய்" என்ற குறிப்பிலிருந்து விளங்கும்.

இயற்கை யன்னையும் இன்பப் பிதாவும் முன்னறி தெய்வங்களாகவேமுன்னிற்பர். இக்கடலின் இக்கரை நின்றோர் பிறவிப் பெருங்கடலின் அக்கரை செல்வதும் எளிதாகும். இவ்வாறே பல கருத்துக்களைக் கோவை செய்து கூறலாம். விரிவஞ்சிவிடுத்தாம். சுருங்கச் சொல்லில், நமது சிவாலயங்களில் நடைபெறும் உத்ஸவாதிகளின் காலஅமைப்பு, இடஅமைப்பு முதலியவைகளில் அரிய வுண்மைகள் பொதிந்து கிடக்கின்றன வென்பதும் அவ்வுண்மைகளை நுணுகி நுணுகி ஆராய்ந்தால் "மூர்த்தி, தலம், தீர்த்தம் என முறையாய்த் தொடங்கினர்க் கோர், வார்த்தை சொல சற் குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற தாயுமானவ சுவாமிகள் திருவாக்கில் அநுபவ வுண்மைகள் பல அடங்கியுள்ளன வென்பதும் புலனாகும். இக்கட்டுரையைக் கண்ணுறும் நண்பர்கள் ஏனைய உத்ஸவங்களின் நடைமுறை, அமைப்பு முதலியவைகளைப் பற்றிச் சிந்தித்து தங்கள் அரிய கருத்துக்களை வெளியிடுமாறு வேண்டுகிறோம்.

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
அடலானே றூரும் அடிகளடி பரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்"

---

# கடவுளருள்

[வ. மு. இரத்திநேசுவரையர்]

[இக் கட்டுரை, சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் சென்ற 26-12-30ல் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 25-ம் ஆண்டு நிறைவு விழாவில் திரு. வ. மு. இரத்திநேசுவரையாவர்கள் செய்த பிரசங்கச் சுருக்கமாகும்.]

## உலக நிலை

காணப்படும் இந்த உலகமானது பற்பல அழகான பொருள்களையுடையது. அப்பொருள்களை அறிவுள்ள பொருள், அறிவில்லாத பொருள் என்று பகுக்கலாம். அறிவுள்ள பொருள்களைச் சரம் அசரம் என்று பிரிப்பதுண்டு. மரம் செடி இவைகள் இயங்காத் திணையாகும். எறும்பு முதல் மக்கள் இறுதியாக உள்ள உயிர்கள் இயங்குந் திணையிற் சேர்க்கப்பெறும். இயங்குந் திணையில் அறிவு வேறுபாடு உருவப் பாகுபாடு முதலியன காணப்பெறுகின்றன. இத் தோற்றங்கள் காணப்பட்ட அவ்வளவில் நின்றுவிடாது மறைதலையும் நாம் வெளிப்படையாகக் காண்கின்றோம். இதனால், உலகம் ஒரு காரியப் பொருளேயாம். காரியம் அழியுந் தன்மையுடையது. காரணம் அழியாது இருப்பது. ஒரு காரியத்திற்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என மூன்று உண்டு. இப்படி நிச்சயஞ் செய்தற்கு அளவைகள் வேண்டப்படுகின்றன. அளவைகள் பலதிறப்படும். அவை யாவும் காண்டல், கருதல், உரை, என்ற மூன்றனுள் அடங்கும். காண்டல் அளவை ஒன்றினாலே மட்டும் எல்லாமுணர்ந்து கரைகாண முடியாது. இக்காலம், சிலர் காட்சி மாத்திரையானே எல்லாவற்றையுஞ் சாதிக்க முற்படுகின்றனர். அதுபற்றி நாம் கவல வேண்டியதில்லை.



## கடவுள் நிலை.

மேலை நாட்டு ஆங்கில பண்டிதர்கள் பலர், இந்த உலகிற்குக் கடவுள் என்ற ஒரு பொருள் முதன்மையாக வுள்ளது என்றும், அப் பொருளைத் தோத்திரஞ் செய்யவேண்டும் என்றும் வெளியிட்டிருக்கிறார்கள். டெனிஸன் என்னும் பெரியார் கடவுளைத் தோத்திரஞ் செய்யவேண்டும், கடவுளுக்கும் (நமக்கும்) பூமிக்கும் அவருடைப் பாதங்களிலிருந்து பொற் சங்கிலியால் இணைக்கப்பட்டது போன்ற தொடர்பு இருக்கின்றது எனவும், மற்றொருவர் கடவுளைத் தியானியாத மக்கள் விலங்குகளுக்குச் சமமாவர் எனவும் விளக்கியிருக்கிறார்கள். அரிய நூல்களும், கடவுள் வழிபாடும் நமது பாரத நாட்டினர்க்குப் புதியன அன்று. ஆகவே, உலகத்திற்கு முதற் பொருளாக ஒரு பொருள் இருக்கின்றது என்பதை அறிவுடையார் யாவரும் ஒப்புக்கொள்வர். அப்பொருளை கடவுள். அது பழம் பொருளாக உள்ளது. கடவுளைப் பல நாமங்களிட்டு வழங்குவர். மங்களந் தருதலினால் கடவுளை நாம் சிவபெருமான் என்ற திருநாமத்தால் வழிபாடு செய்கின்றோம். சைவம் என்பது சிவ சம்பந்தமானது. ஒரு நிலையில் நின்று வழிபாடு செய்வதே நன்மை பயப்பதாம். தாயுமானப் பெரியார்,

"சைவ சமயமே சமயஞ்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டும்இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலுஞ் சமய
நெறிபுகுத வேண்டாம் முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே"

எனக் கூவி யழைக்கிறார்.

இவ்வுலகத்தையும் ஆன்மகோடிகளையும் அசைவிக்குஞ் சக்தி கடவுளிடத்திருக்கின்றது. சக்தி ஞான வடிவானது. "சத்தி தன்வடிவேதென்னிற் றடையிலா ஞானமாகும்" என்றும், சிவமும் ஞானவடிவுடைய பொருள் என்பதை "ஞானமேயான திருவடிவுடையாய்" என்றும், "ஞானந்தானுருவாகிய நாயகனியல்பை, யானுநீயுமாயிசைத்து மென்றா லஃதெளிதே" என்றும் பெரியார் கூறியிருக்கின்றனர்.

கடவுள் அறிவொளியாக விளங்குவதைச் சொரூபத் திருமேனி பென்றும், நாமரூபங்களோடு திகழ்வதைத் தடத்த வடிவமென்றும் வகுத்து, சுத்தாத்துவித சைவ சித்தாந்தங் கூறும். ஆன்மாக்களைப் போலச் சிற்றறிவு சிறு தொழில்களில்லாது, முற்றறிவு முற்றுத் தொழில்கள் கடவுளுக்கே உண்டு. எல்லாஞ் செய்யும் வன்மை கடவுளிடத்து அமைந்திருக்கின்றது. கடவுளை அகங்கார முனைப்புடன் காண முடியாது. ஞானப்பெருங் கண்ணுடைய சீரியோர் கண்டு நமக்கு நல்வழி காட்டியிருக்கின்றார்கள். அவருடைய வியாபகம் அளவிடப்படாதது. வெளி, காற்று, நெருப்பு, தண்ணீர், மண் என்ற பூதங்களின் பரிணாமத்தால் உலகமும், உடல்களும் காணப்படுகின்றன. அட்டமூர்த்தியாகக் காணப்படுபவர் கடவுளே.

"நிலம்புனல் அனல்கால் காண
கிறத்திடு மழிக்குங் காக்கும்
பலந்தரு மொருவ னிங்குப்
பண்ணிட வேண்டா வென்னில்
இலங்கிய தோற்ற கிற்ற
லீறிவை யிசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசந்
தனக்கிலா நாதன் வேண்டும்"

கடவுள் அங்கிங் கெனாதபடி எங்கும் வியாபித்திருக்கின்றார். அது,

“ எள்ளுறு மெண்ணெ யென்ன
எறிமணி யரவ மென்னக்
கள்ளுறு போது சான்ற
கடியெனச் சலாகை தன்னில்
விள்ளுதற் கரிய சோதி
தானென விளங்கி யெங்கும்
உள்ளொடு புறம்பு மாகி
யுலவிலீற் றிருக்கு மன்றே ”

என்னும் பாட்டாலறியலாம்.

கடவுள் எங்கும் நிறைந்திருப்பதையே திருவள்ளுவர் நன்குணர்ந்து அப் பரம்பொருளின் முதன்மை காட்டி விளக்கி யிருக்கின்றார். அத் திருக்குறள் தமிழுக்கு ஒரு பெரு மகுடமாக இலங்குகின்றது. சில ஆங்கிலம் படித்த பெரியோர் தமிழை மிகவும் இகழ்ச்சி செய்வர். திருக்குறள் பன்னிரு மொழிகளில் பெயர்த்து எழுதப் பட்டிருக்கின்றது. வடநூலில் வேத சிவாகமங்கள் உள்ளன. ஓரிடத்து, “ அக்ஷராணாம் அகாரவத் ” என்று காணப்படுகின்றது. அகரமுதல எழுத் தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு” என்று திருக்குறளில் காட்டப் பெற்றிருக்கின்றது. கடவுளின் செறிவு முதன்மை இவற்றையும், நன்னீதிகளையும் தமிழில் பரக்கக் காணலாம். கடவுள் செய்வன கிருபையினாலே யன்றி வன்கண்மையாலன்று. “நந்தம், கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே ” என்பது மறிக.

## கடவுளின் கைம்மாறற்ற கருணை நிலை

கடவுள் ஆன்மகோடிகளின் மீது வைத்த பெருங் கருணைக்கு அளவே கிடையாது. கருணையே திருமேனியாகக் கொண்டு கடவுள் காட்சியருளா விட்டால் மக்களாகிய நாம் நலமடைய முடியாது. அருவம் அருவுருவம் உருவம் என்று கடவுளுக்குத் திருமேனிகள் பல இருக்கின்றன. உருவத் திருமேனி வழிபாடு முதலிற் செய்யத் தக்கதாகும். உயிர்களுக்குள்ள, தோல் என்பு, நரம்பு, தசை, இரத்தம், மச்சை, சுவேதநீர் முதலிய தாதுப் பொருள்களால் யாக்கப்பெற்ற உடம்புகள் போலாது, மந்திர சரீரியாகவே விளங்கும் பரமபதி உருமேனி கொண்டது, தாழ்ந்த நிலையில் இருக்கின்ற மனிதர்களை மாட்சியளித்துக் காக்கவேயாம்.

“ உருவருள் குணங்களோடு முணர்வரு
ளுருவிற் றோன்றுங்
கருமமுமருள ரன்றன் கரசர
ணாதி சாங்கந்
தருமருளு பாங்கமெல்லாம் தானரு
டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக்கென்றே யாக்கின
னசிந்த னன்றே ”

## உயிர்களின் வேறுபாடு

கடவுள் உயிர்களை உண்டாக்கவில்லை. உயிர்கள் பல. அவை அநாதியானவை. ஆனால், உயிர்கள் எடுக்கும் உடம்புகள் பற்பல வேறுபாடுடையன. காரணம் கர்மாவேயாம். கர்ம வேறுபாடுதான் ஆன்மாக்களின் இன்பதுன்பங்களுக்கு ஏதுவாகும். மரம், ஊர்வன, பறவை, மிருகம் என்பனவாதிய தோற்றங்கள் கீழான நிலைமையுடையன. நல்வினையின் கதிப்பினால் மக்கட்பிறவி கிடைத்தது. சிலர், ஆன்மாவும் பிரமமும் ஒன்றென்பர். அது பொருந்தாது. ஓருயிர் மிருகமாகவும், ஓருயிர் மனிதனாகவும், ஓருயிர் பெரியோனாகவும், ஓருயிர் வேலைக்காரனாகவும் வேறுபடக் கடவுள் படைப்பாரேயானால், அவர் வன்கண்மை யுடையராவர். கடவுள் கருணையாளர் என்று கூறுவதும் இல்லையாய்விடும். ஆகவே, கர்மத்தின்படி தோற்றங்கள் உயிருக்குண்டாகின்றன. “ கர்மம் ஒன்றே போதும்; கடவுள் என்ற ஒரு பொருள் வேண்டாம் ” என்றால்,

கர்மம் சடமாதலின் சித்துப் பொருளாகிய ஆன்மாக்களை அது பற்ற முடியாதென்க. ஆன்மாக்களும் சிற்றறிவுடையவைகளாதலின், கர்மத்தைக் காலமறிந்து புசித்துத் தொலைக்க முடியாது. ஆகவே முற்றறிவுடைய முதல்வன், காலமறிந்து வினைகளை ஊட்டிப் பாகம் வருவித்து இன்பமளிக்கின்றார். உயிர்கள் யாவும் கடவுளுக்கு அடிமைப் பொருள்கள். உலகம் அவருக்கு உடைமைப் பொருள். கடவுளே ஆண்டான். தலைவராகிய தம்மை யறிந்து தக்கன ஆற்றித் தகாதன விட்டு உய்யும் பொருட்டே கடவுள் இம்மனித உடலை நமக்குத் தந்தருளினார். மனித சரீரத்துள்ள ஒவ்வோர் உறுப்புக்களும் கடவுள் வணக்கத்திற்கு ஏற்ற முறையில் அமைந்திருக்கின்றன. அப்பாடிகள், “ வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியுந் தந்த தலைவனை ” என்றும், “ தலையே நீ வணங்காய் தலை மாலை தலைக் கணிந்து தலையாலே பலிதேருந் தலைவனைத் தலையே நீ வணங்காய் ” என்றும் கூறிப்போந்த நன்மதி காட்டும் பொன்மொழிகள் சிந்திக்கத்தக்கன.

## நமது தேகநிலையும் கடமையும்

நமது உயர்ந்த பகுத்தறிவுடைய இச்சரீரம் மிகவும் இலேசான மட்பாத்திரம் போன்றது. பெரியார், நீரிற் குமிழிபோன்ற நிலையாமையை விளக்கியும், உயிருக்குறு துணையானவர் தோன்றாத் துணையான சிவபிரானே என்று தெரிவித்தும் சென்றது, உடலின் நிலையாமை கருதியேயாம். ஆதலின், நாம் நமது உல்லாச வாழ்க்கையில், உண்டு, கண்டு, உயிர்த்து, உறங்கிய காலத்தில் உண்மைப் பக்தியுடன் சிறிது காலம் கடவுளைப் போற்றினாற் றான் ஏற்றமடையலாம். சிலர் சிறிதும் மரண சிந்தனையும், மறுமைத் துன்பமும் இருப்பதாகக் கருதுவதில்லை. சிலர், வயசு சென்ற கிழவரான காலத்தில் சாமி கும்பிடலாம் என்பர். அப்படிச் செய்யலாம் என்றாலோ, நோய் அல்லது மரணம் சடுதியில் வந்து வருத்துவதை நாம் வெளிப்படையாகக் காண்கின்றோம். ஆகவே சிவத்தியானத்தை, நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் இடைவிடாது செய்து இன்பநிலை கூடுதலே கடமையாம். ஆதலின், யாவரும் சிவபிரானை நினைந்து வழிபட்டு மேம்பட முன்னிற்க வேண்டும். மனம் நினைக்கவும், வாக்கு ஸ்தோத்திரஞ் செய்யவும், உடல் வணங்கவும் சாதகமாக நமக்குக் கிடைத்திருப்பதை நாம் அறிந்து வழிபட்டால், புண்ணியமானது வளரும்; பாவந்தேயும்; இருவினை ஒப்பு மலபரிபாகம் என்ற இவற்றானே ஆன்மா தூய்மையடையும். ஆசையற்றபோது வீடு கைகூடும். ஆதலின், கடவுளை ஆண்களும் வழிபடலாம். பெண்களும் வழிபடலாம், உயர்ந்தோரும் வணங்கலாம், தாழ்ந்தோரும் வணங்கலாம். இளைஞரும் போற்றலாம். முதியோரும் போற்றலாம். சிலர் “ கடவுளை விபூதி யணிந்து வணங்குகிறார்கள். அவர்கள்பாடு கஷ்டமா யிருக்கின்றது ” என்று ஏளனஞ் செய்கின்றார்கள். உயிர்கள் செய்த வினை நீக்கத்திற்காகவே சரீரங்கள் கிடைத்தன. வினை

யை அனுபவித்தே ஒழிக்க வேண்டும் என்றுணர்க. ஆணவமலத்தினாலே பந்திக்கப்பட்ட ஆன்மாக்களுக்குக் கர்ம மாயா மலங்களைக் கூட்டி இறைவன் வருத்தலாமா என்பாரும் உளர். உலகத் தொழின் முறையிலே, வண்ணான் அழுக்கு வஸ்திரத்தை உவர்மண் சாணம் போன்ற பொருள்களைக் கூட்டி மிகவும் அழுக்குடையதாக்கிப் பின்பு எல்லா அழுக்கும் போக்கி வெண்ணிற மாக்கித் தருகின்றான். இதுபோலவே, சர்வ சக்தியுடைய கடவுளும் அநாதியே ஆணவ மலத்தினாலே பந்திக்கப்பட்ட ஆன்மாக்களுக்குக் கர்மமாயாமலங்களைக் கூட்டிப்புசிக்கச் செய்து மலபரிபாகம் உண்டாகும்போது, சிவஞானம் பிரகாசிக்கச் செய்து உண்மை முத்தியைக் கொடுத்தருளுவார். இடையிடையே துன்பு நேரச் செய்து நலமடையும்படி செய்வதே திருவுள்ளமாம். சிவஞான வாயிலானே முத்தியடைந்த உயிர்கள் சிவபிரானைப்போல ஐந்து தொழிலும் செய்வது என்பது கருத்தன்று. சிவாநுபூதி மானாக விளங்குவதேயாம். “சீவன், சிவாநுபவ மொன்றினுக்கே யுரித்து” என்பது சித்தாந்த உத்தம நிலையுடையார் திருவாக்கு. துஷ்டப் புதல்வரை அன்னை தந்தையர் தண்டித்தலும், கண்ணோய் சிலந்தி முதலிய நோயுடையாரை வைத்தியர் சத்திரமிடல் முதலியவற்றால் வருத்திச் சுகமாக்கலும் கண் கூடாம். ஆண்டானாகிய பரமபதியும் உடம்புதோறும் உடனாய் நின்று தாம் ஆன்மாவின் செயலிற் கட்டுண்ணாது, அச்செயல் வகை நாடியருள்வார். கடவுள் தீவினைப் பயனை நரகத்தினும், நல்வினைப் பயனைச் சுவர்க்கத்தினும் அனுபவிக்கச் செய்து பின்னர் நன்னெறி யருளப் பெற்றாரும் பலரே! சைவ சமயவுண்மை நாடிய பெரியார் அவதரித்து, இருவினை யொப்பு மலபரிபாகம் எய்தியும் சிவசின்ன தாரணராய்த் திருக்கோயில் வழிபாடு செய்தனர். முக்கியமா யுள்ளவர் நால்வர். இவர்களைச் சமயாசாரியார் என்பர். நாம் சைவத்தை ஒரு கண்ணாடிப் பாத்திரம் என்று கருதவில்லை. பண்டு அருந்தொண்டு செய்த அப்பெரியாரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதே இங்கே ஞாபகப் படுத்தப்படுகிறது. சைவம் வளர்த்த பெரியாரது உயர்வு கூறவும் வேண்டுமா?

“சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலு மென் சுந்தரனுஞ், சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி, வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே, எந்தைபிரானைந் தெழுத்தெங்கே’’

இச்செய்யுளைச் சிந்திக்க.

இத் திருத் தொண்டர்களுக்குக் கருணைமழை பொழிந்து காத்த பரம்பொருள் இன்றும் இருக்கின்றார். காலநிலைப்படி சீலம் மாறுதலடைதலால், திருவருட் பேறும் மாற்றமடைகின்றது. “ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா” என்பது மிக்க அநுபூதிவாக்கே யன்றோ! செயற்கரிய செய்த சிவஞானப் பெரியார் அரிய அற்புதங்களை ஆற்றினார்கள்.

“பாலைநெய்தல் பாடியதும் பாம் பொழியப் பாடியதும், காலனையன் றேவிக் காரங் கொண்ட—பாலன், மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங் காணம்போ லல்லாமை காண்’’

பாலை நிலத்தை நெய்தல் நிலமாகும்படி பாடியவர் திருஞானசம்பந்த



மூர்த்திநாயனார். பாம்பினாற் கடியுண்ட அப்பூதியடிகளின் மூத்த திருநாவுக்கரசை விடம் நீக்கி யருளியவர் அப்பரடிகள். அவிநாசியிலே முதலை விழுங்கிய பிராமணச் சிறுவனை அம் முதலை வாயிலிருந்து அழைத்துக் கொடுத்தவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். அரிய இந்த அற்புதங்களைச் சிவகரணம் பற்றி நின்று ஆற்றினரன்றி, தற்போத நிலையிற் சாமர்த்தியமாகப் புரிந்தாரல்லர். சிவ நாமத்தை உச்சரித்துச் சிறப்படைந்த பெரியார் சிவாநந்தம் மிகப் பெற்றுப் பாடியிருக்கின்றனர். சிவபெருமான் என்ற அரிய திருநாமத்தை மாணிக்கவாசக சுவாமிகள் நன்கு காட்டியுள்ளார்கள். அது,

“பால்நினைந் தூட்டுந் தாயினுஞ்
சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கியுள்ளொளி
பெருக்கி யுலப்பிலாவானந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்
திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்
பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே.’’

என்பதாம்.

திருவாசகத் தேனைத் தெள்ளித் எடுத்து ஊட்டும் வன்மை நமது சபைத் தலைவராகிய பண்டிதமணியவர்களிடத்து அமைந்திருக்கின்றது. நான் அவ்வளவு சதுரப்பாடுடையனல்லேன். வேதசிரசாகிய உபநிஷதம், “சிவ ஏகோத்யய: சிவங்கர ஸர்வம் அந்யத் பரித்யய ஸமாப்தாதர்வசிகா’’ என்று முடிந்த பொருளைக் காட்டிற்று. ஆகவே, சிவபிரானே முழுமுதற் கடவுளென்பதும், சிவபிரானை வணங்கி இன்ப நெறி கூடச் சாதனமாகவே இம்மனிதசரீரம் கிடைத்ததென்பதும், அக்கடவுளின் கருணைக்கு அளவில்லையென்பதும், அருட்பேற்றைக் கருதிக் கூடியவளவு அவரை நாம் வழிபட வேண்டும் என்பதும், நாஸ்திக வாதம் நன்மை யளிக்காது என்பதும், இது காறும் நான் கூறியதின் கருத்தாகும். இச் சொற்பொழிவு நடக்க இடங் கொடுத்த காரியதரிசியவர்களுக்கும், தலைவரவர்களுக்கும், பொறுமையுடன் சிற்றறிவுடையேன் கூறியவற்றைச் செவிமடுத்த சபையாருக்கும் எனது நன்றி யறிதலான வந்தனமளித்து இவ்வளவில் எனது பிரசங்கத்தை நிறைவு செய்கின்றேன். —(சிவநேசன்.)

---

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் நாற்பத்தேழாம் ஆண்டு நிறைவு விழா

# நிகழ்ச்சி வரலாறு

[ந. சிவகுருநாதன் பிள்ளை]

[இவ்விழா சென்ற மார்கழித்திங்கள் 13,14 ஆம் நாட்களில் கோயம்புத்தூர் வழக்கறிஞரும் சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினருமாகிய உயர் திரு, C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள் தலைமையின் கீழ் இதன் அடியிற் கண்டவாறு நடாத்தப் பெற்றது.]

28-12-30 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்குத் திருநெல்வேலி உயர் திரு. சுந்தர ஓதுவா மூர்த்திகளின் தேவாரக் குழாங்களுடன் சபையின் உறுப்பினர்கள் திருவீதி வலம்வந்து சிவாலயத்திற்கும் திருஞான சம்பந்தப் பெருமான் மடாலயத்திற்கும் சென்று வழிபாடு செய்தார்கள். மாலை 3-30 மணிக்குப் பேரவை தொடங்கப் பெற்றது. உயர்திரு. சுந்தர ஓதுவாமூர்த்திகளின்

தேவாரக் குழாத்தினரால் கடவுள் வாழ்த்தும், திரு. மா. கிருஷ்ணபிள்ளை அவர்கள் பெண் பாடசாலை மாணவிகளால் மன்னர் வாழ்த்தும் பாடப்பெற்றன. வரவேற்புக் கழகத் தலைவர் திருவாளர் M. சின்னத்தம்பித் தேவர், B.A.,B.L., அவர்கள், (வழக்கறிஞர்), சபைக்குப்போந்துள்ள, வெளியூர் உள்ளூர் கனவான்களை வரவேற்ற பின்னர் அவைத் தலைமை வகிக்கும்படி திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார், B. A. அவர்களை வேண்டிக்கொண்டனர். சபையின் துணைத் தலைவரும் தூத்துக்குடி சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டித் தலைவருமான திருவாளர் S. குமாரஸ்வாமி பிள்ளை அவர்கள் அதனை ஆமோதித்தார்கள். சபையாரின் ஆரவார முழக்கத்துடன் அவைத்தலைவர் அவர்கள் தமது ஆசனத்தில் அமர்ந்தார்கள். வரவேற்புக் கழகத் தலைவர் அவர்களால் அவைத்தலைவர் அவர்கட்கு, வரவேற்புத்தாள் படித்துக் கொடுக்கப்பெற்றுச் சபையின் தலைவர் திருவாளர், சி. வ. நல்ல பெருமாள் பிள்ளை அவர்களால் (நகர பரிபாலன சங்கத்தலைவர் மிட்டாதார்) பூமாலைபுனையப் பெற்றது. அமைச்சர் திரு. M.A.S முத்துப்பிள்ளை அவர்கள் சபையின் நாற்பத்தேழாம் ஆண்டு அறிக்கையைப் படித்தனர். அவைத் தலைவர் அவர்கள் "சைவ சமயம்" என்பதைப் பொருளாகக் கொண்டு சுமார் ஒருமணி நேரம்வரை முன்னுரை நிகழ்த்தினார். (இது அடுத்த இதழில் வெளி வரும்.) அதன் பின்னர் திருச்செந்தூர் புராணிகர், திரு. வ. முத்துக் குமாரசுவாமி பிள்ளை அவர்களால் "திருப்பணி," கோபால சமுத்திரம் உயர்தர பாடசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திரு. இராஜகோட்டியப்ப பிள்ளை அவர்களால் "பாட்டும் பொருளும் அதன் பயனும்," ஜலகண்டபுரம் ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்களால் "குறிகளும் அடையாளமும் கோவிலும்," லால்குடி போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் திரு. அ. மு. சரவண முதலியார் அவர்களால் "கண்ணப்பர் வரலாறு" என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ச் செய்யப் பெற்றன. அவைத்தலைவர் அவர்கள் ஒவ்வொரு சொற்பொழிவின் முடிவிலும் நுண்பொருள்கள் அடங்கிய முடிப்புரை கூறினார்கள். இரவு 11-மணிக்குத் தமிழ் மறை முழக்கத்துடன் அன்றைய கூட்டம் கலைந்தது.

மீண்டும் 29-12-30 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குப் பேரவை தொடங்கப் பெற்றது. திருவாளர் ச. முத்துக்குமாரசுவாமி பிள்ளை யவர்களால் தயாரிக்கப்பெற்ற "ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணம்" என்னும் நாடகம், திரு. மா. கிருஷ்ணபிள்ளை யவர்கள் பெண் பாடசாலை மாணவிகளால் இனிது நடிக்கப்பெற்றது. அவைத்தலைவர் அவர்களாலும் ஏனைய சில கனவான்களாலும், அபிப்பிராயங் கூறப்பெற்று பகல் 12 மணிக்குக் கூட்டம் கலைந்தது. மாலை 3-30 மணிக்கு மீண்டும் பேரவை தொடங்கப் பெற்றது. உயர் திரு. சுந்தர ஓதுவா மூர்த்திகளால் தமிழ் மறை ஓதப்பெற்றது. சாத்தூர்வழக்கறிஞர் திரு. T. S. கந்தசாமி முதலியார் அவர்களால் "இலக்கியமும் வாழ்க்கை நெறியும்" லால்குடி திருவளர் செல்வன் அ. மு. ச. திருஞான சம்பந்தனால் "மெய்ப்பொருள் நாயனார்", ஒட்டப்பிடாரம் தமிழாசிரியர் திரு. இராமசுப்பா நாயுடு அவர்களால் "இனிமையின் இனிமை," திரு. அ. மு. சரவண முதலியார் அவர்களால் "பொய்யடிமை யில்லாத புலவர் யார்?" திரு. ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை யவர்களால் "தாயுமானார் உட்கிடை," என்னும் பொருள்கள்பற்றிக் கேட்டோர் உளங்கொள அரிய சொற்பொழிவுகள் செய்யப் பெற்றன. அவைத்தலைவர் அவர்கள் ஒவ்வோர் சொற்பொழிவினுமுள்ள நயங்களை எடுத்துப் பாராட்டி முடிப்புரை கூறினார்கள்.

சபையின் துணைத்தலைவர் திரு. S. குமாரஸ்வாமி பிள்ளை அவர்களால் அவைத்தலைவர் அவர்கட்கும் ஏனைய சொற்பொழிவாளர்கட்கும்நன்றிகூறப் பெற்றது. சிவாலய தர்மகர்த்தர் திரு. சி. ப. முத்துஸ்வாமி பிள்ளை யவர்கள் சிவாலயத்தினின்றும் பிரசாதம் கொணர்வித்து அவைத்தலைவர் அவர்கட்கும் ஏனையோர்க்கும் வழங்குவித்தனர். திருநெல்வேலி உயர்திரு. சுந்தர ஓதுவா மூர்த்திகளால் தமிழ்மறை இன்னிசையுடன் ஓதப்பெற்று இரவு 12 மணிக்கு ஆரவார முழக்கத்துடன் சபையின் நாற்பத்தேழாம் ஆண்டு நிறைவுவிழாப் பேரவை இனிது முற்றுப் பெற்றது.



---

# சிவானந்தபோதம்

[சே. சிவஞானம் பிள்ளை]

## முகவுரைக் குறிப்பு

யான் தஞ்சைமா நகரத்தில் உத்தியோகமுறையில் இருக்கும்போது என் இனிய நண்பரும், திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும், அருங்கலை விநோதருமாகிய ஸ்ரீமான் முத்துரத்ந முதலியார் அவர்களால் இரண்டு ஏட்டுச்சுவடிகள் எனக்குப் பரிசாக அளிக்கப்பட்டன. அதில் ஒன்று தொல்காப்பியப் பொருளதிகார ஏடு; இரண்டாவது ஏட்டில் (1) திருவாசகம் (2) திருவிசைப்பா (3) திருப்பல்லாண்டு (4) திருக்குறள் (5) பிள்ளையார் அகவல் (6) திருமுகம் (7) திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா (8) திருமுறைத்திரட்டு (9) பூசைத்திரட்டு (10) திருவெழு கூற்றிருக்கை உரை (11) சிந்தனை (12) காடவர்கோன் வெண்பா என்னும் பன்னிரண்டு நூல்கள் அடங்கியுள்ளன. இந்த ஏட்டின் இறுதியில் 'நந்தன ஞு ஆடிமீ 5உ சுவர்க்கபுரம் தவப்பிரகாச சற்குரு சாரணாவிந்தமே பொருளெனத் தெளிந்த சிவப்பிரகாசத் தம்பிரான் ஏடு' என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஏடு சுமார் நூறுவருடங்கட்கு முன் எழுதப்பட்டது என்று அபிப்பிராயப் படுகின்றார் என் நண்பராகிய இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகர் (சித்தாந்தம் பத்திரிகை மலர் 3 இதழ் 4 பார்க்க)

2. சைவாபிமானிகள் எல்லோரும் பாராயணஞ் செய்வது அகத்தியர் தேவாரத்திரட்டென்பது வெள்ளிடைமலையன்றோ? அது அச்சிடப்பட்டும் வழங்குகின்றது. மேற்கூறிய ஏட்டுச் சுவடியிலிருக்கும் திருமுறைத்திரட்டு யாது என்பதை ஆராயுங்கால், சந்தானாசிரியர் நால்வருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியார் திரட்டியதென்பது புலனாகின்றது. உமாபதிசிவம் திரட்டியது என்று கூறுவதற்கு ஆதாரம்

என்னவென்று நோக்குங்கால் ஞான தீக்கைத்திருவிருத்தத்தில் 'தேசுமாடும் அருட்பயின்ற ..............திருமுறைத் திரட்டும் திரட்டி வைத்தனன் மன்னுயிர்க்கே' என்னும் செய்யுள் சான்று பகர்கின்றது. இச்செய்யுள் முழுவதும் யாம் மேலேகூறிய சித்தாந்தப்பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இதனுனே 'ஞானதீக்கைத் திருவிருத்தம்' என்னும் நூல் ஒன்று உண்டு என்பது விளக்கமாயிற்று. அந்த நூல் எங்கேனும் கிடைக்குமோ என்று தேடும்போது, என்நண்பரும் என் தந்தையர் பால் கல்விபயின்றவரும், அபிதான சிந்தாமணி நூலாசிரியரும், சிறந்த தமிழ் வித்துவ சிரோமணியுமாகிய ஆ. சிங்காரவேல் முதலியார் அவர்கள் தாம் அரிதிற்றேடி சேகரித்துள்ள பிரதியைத்தந்து உதவினுர்கள். அப்புத்தகத்தில் 1) சிவானந்த போதம் (2) ஞானதீக்ஷாவிதி (3) போஜனவிதி (4) ஞானபூஜைத் திருவிருத்தம் (5) ஞானபூஜா காணம் என்னும் ஐந்து சிறு நூல்கள் அடங்கியுள்ளன.

3. மேலே கூறிய உமாபதிசிவம் திரட்டிய தேவாரத் திரட்டைச் சிற்சில குறிப்புக்களுடன் அச்சிடவேண்டும் என்னும் நோக்கத்துடன் பிரதி செய்து வெளியிடாமல் வைத்திருந்தேன். என்பால் திருமுறைத்திரட்டு உள்ளது என்பதை உணர்ந்த என்நண்பர் சைவ சித்தாந்த மகா சமாஜ காரியதரிசி ஸ்ரீமான் பாலசுப்பிரமணியமுதலியார் அவர்கள் அப்பிரதியை வாங்கிச்சென்று "சித்தாந்தம்" வாயிலாக வெளியிட்டது யாவரும் அறிந்ததே (சித்தாந்தம் மலர் 3. இதழ் 5, 6.)

4. மேற்குறித்த ஐந்து சிறு நூல்கள் அடங்கிய அச்சுப் புத்தகம் இற்றைக்கு அறுபது வருடங்கட்கு முன்னரே சைவ சித்தாந்த சாத்திரம் இன்னதென்று உலகினர் அறியாத காலத்தில், அநேக சைவ சித்தாந்த நூல்களை அச்சிட்டு உதவியசிந்தாதிரிப்பேட்டை கோ. சண்முகசுந்தர முதலியார் அவர்களது சிவஞான போதயந்திரசாலையில் அச்சிடப் பெற்றது. வாசித்துணர விரும்பும் சிவ நேயர்கட்கு அப்புத்தகம் கிடைப்பதும் அரிதாக இருக்கின்றது. இந்த ஐந்து நூல்களையும் செப்பஞ் செய்து குறிப்புரையுடன் அச்சிடவேண்டும் என்னும் எண்ணம் எனக்கு உண்டு என்பதை என் நண்பர் ஸ்ரீமான் பாலசுப்பிரமணிய முதலியாரிடம் விளம்பினேன். யான் விளம்பினதைக் கேட்ட அவர் அப்புத்தகத்தை உடனே வெளியிடவேண்டும் என்னும் பேரவாக் கொண்டவராய் அப்புத்தகத்தைத் தம் வசம் கொடுக்கும்படி வேண்டினுர். குறிப்பு முதலியன எழுத வேண்டும் என்று யான் தாமதஞ் செய்தபோது அந்நூலை உள்ளது உள்ளபடியே உடனே வெளியிடின் பின்னர் குறிப்புரை முதலியன எழுதலாம் என்று வற்புறுத்தினுர். அவர் வேண்டுகோட்கு இணங்கி இப்புத்தகம் "சித்தாந்தம்" வாயிலாக வெளி வருகின்றது.

5. அச்சிட்ட புத்தகத்தில் இந்நூல்களின் ஆசிரியர் பெயர் அச்சிடப்படவில்லை. என் நண்பரும், கல்வெட்டு ஆராய்ச்சியாளருமான தமிழ்ப் போறிஞர் இலக்கண விளக்கப் பாம்பரை சோம சுந்தர தேசிகர் தம்மிடத்திலெட்டைப்பார்த்துப் பிரதி செய்த சிவானந்த போதம் என்னும் நூல் உண்டென்றும், அதனை இயற்றியவர் திருவாரூர் ஞானப்பிரகாசர் என்று அப்பிரதியில் எழுதியிருக்கின்றது என்றும் சொல்லியதோடு அமையாமல், அப்புத்தகத்தின் தலைப்பிலுள்ள கணபதி காப்பையும் எழுதித் தந்தனர். இவருக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

6. சைவ சம்பந்தமான நூல்கள் வெளிப் போந்து யாவர்க்கும் பயன் படவேண்டும் என்பதையே முழு நோக்கமாகக் கொண்ட என் நண்பர் ஸ்ரீமான் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கட்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப் பட்டவனுக இருக்கிறேன்.

---



## திருவாரூர் ஞானப்பிரகாசர்

அருளிய

## சிவானந்தபோதம்

**சிட்டர்கள் போற்றுஞ் சிவானந்த போதங்**
**கட்டுரைத் திடவருள் கணபதி காப்பு.**

மூப்பது வகைப்படு முத்திநன் னெறியினைச்
செப்புவ னமைத்துத் தசகாரி யத்திற் [ன்
பொறையி லைம்பூதமும் பொய்யென வருளா
முறையுற நீங்கு முத்திச் சகலமும்
பஞ்ச பூதப் பழிப்புறு முடலும்
அஞ்சு புலன்றனை யறிந்திடும் பொறிகளுஞ்
செறிந்திடு புலனைத் தெரிந்திடிற் றனித்தனி
அறிந்திட வறியா வந்தக் கரணமும்
அக்க ரணங்க ளகல வகன்றிடுந்
தக்கக லாதித் தத்துவக் குழுவு
மத்தகு கலாதிக ளகல வகன்றிடுஞ்
சுத்த தத்துவமுந் தொடர்ந்தெழு முயிர்ப்பும்
வடிவுறக் கண்டு மலமெனத் தெளிந்து
நெடிதுற வாங்கவை நீங்கலிவ் வேழுந்
தத்துவ ரூபந் தத்துவ தரிசனந்
தத்துவ சுத்தி தன்னு ளடங்கும்
மாயையுங் கன்மமு மாமாயை யுமென
ஆயவிம் மூன்று மகன்றிடு மிவனே
தத்துவா தீதந்தனி னமைக்கும் பினையும்
ஒத்திடு மலவிரு ளுறுவது கேவலம்
மற்படு கேவலத் தந்தகா ரத்துயிர்
நிற்பது கேவல நிலையது வாகும்
இருண்மல நீங்குதற் கெண்ணுத றிரோத
மருள்வடி வான வவதர மாகும்
அங்குயி ராண்பதற் காதா வுறுமிடஞ்
சங்கா னிச்சா சத்தியின் றரிசனம்
மருவுயிர் வெளிப்பட வல்லிரு ணீக்கத்
தருவது கிரியா சத்திய தாகும்
அந்தவா யில்தனக் கறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்
முழுதுநின் றுணர்த்து மூவகைச் சத்தியும்
நழுவிநின் றிடுவது ஞானு தீதம் [ஞ்சென்
புணர்ந்தவல் லிருளினைப் புரைபுரை தொறு
றுணர்ந்திடு மறிவான்ம ரூபம தாகும்
கேவல வல்லிருள் கீழ்படத் தான்முழு
தாவதே யான்ம தரிசன மாகும்
நயந்திடு மிச்சா ஞானக் கிரியையிற்
பயன்றிடா நிலையது பரைதரி சனமெதிர்ப்
படுபரை யினிற் சேதன வியாபகப்
பாப்பினைக் காண்பது பரையின் வியாத்தி
விரவிய பரையினில் வியாபகத் துடனுயிர்
பாவிநின் றறிவது பரையினில் யோகம்
ஆங்குறு பரையி னனுபவ நிலைமையைப்
பாங்குறப் பெறுவது பரைதனிற் போதம்
முற்பரை யோக முழுப்பரை சாக்கிரந்
தற்பரை போகஞ் சாக்கி ராதீதம்
ஓர்ந்திட நின்ற வுணர்வது முழுதுஞ்
சோர்ந்திட லான்ம சுத்திய தாகும் [னத்
இருள்கெடக் கதிரொளி யெழுந்தது போலு
தருளெழ வாணவ மகன்றது மிவனே
அறிவக லதீதத் தனுபவஞ் சிறிதாங்
குறுவது வேசுக ரூபம தாகும்
ஆன்றவச் சுகத்துக் காதார மாங்குணி
தோன்ற நிற்பதுவே சுகாதீத மாகும்
அகண்டமுஞ் சுகவடி வாஞ்சிவ மயமெனச்
சகந்தனைக் காண்பது தான்சிவ ரூபம்
எங்குங் கலந்த விறைவனைத் தொழிலையும்
அங்ஙன் கறிவ தருஞ்சிவ தரிசனம்
மருளதி கார மலமகன் றிடவே
அருளது மேவிடு மவதா மிவனே
அற்புத வருளா லத்துவிதம் பெறச்
சிற்பாத் திசைவது சிவயோக மாகும்
நற்பர சிவத்துற நண்ணுபே ரின்பஞ்
சிற்பரா நந்த தரிசன மாகும்
பெறுபரா னந்தப் பெருக்கினிற் கலந்தாங்
குறுவதா னந்த யோகம தாகும்
அருந்து மானந்த வவச மேலீடு
பொருந்திய நிலைசிவ போகம தாகும்
மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளினுள்
வையங் காண்பது மறித்துமக் காட்சியே.

**சிவானந்த போத முற்றியது.**

# ஞா ன தீ க்ஷா வி தி

மன்னுபல பிறவிகளின் முன்னே செய்த வைதிகமா தவவலியான் மருவிச் சைவந்
தன்னில்வளர் சமயவிசே டாதி யான சரியைகிரி யாயோகஞ் சரித்து ஞான
நன்னிலைமை பெறச்சத்தி நிபாத மேவி நாடுமௌ வினிலிறைவ னருளா னண்ணும்
பன்னரிய பாகுருமற் றவனை நாளும் பணிந்துபணி செய்யவந்து பலிக்கு மன்றே. (க)

அன்றுவ தாதிரைநற் பங்குனியா மதனு ளருட்பூர முத்திரமு மணந்தரத்து ளதற்
பின், குன்றுத புகழ்மூல மாவணியிற் சதயங் கோதிலருட் சோதியிவை யாயினு மேற்
கொள்க, வென்றுரொன் றினிசெல்வி முதற்சாமத் தமைக்க வெழிலெயிறு விளக்கி
யெழிற் புனற்படிந்து நியதி, நன்றாகப் புரிந்தாசா னடிவிளக்கிக் குடித்து நன்கமரும்
பரிகலமு நவையகல நுகரே. (உ)

நுகர்ந்ததுவே புனர்ச்சனன சுத்தி யென்பர் கற்றோர் நுவன்றவைகேட் பரியவிட
நுண்களபமெழி, லகன் றருவெண் சுதையொழுக்கான் மேற்கட்டியதனு லலர்தருபூந்
தொங்கலா லலங்கரிப்பித் ததனுட், புகுந்தணுகு மவன்முற்செய் திருவிளக்கு ஞான
போனகமு மதற்குரிய பொருள்புனல்பூ முதலாய்ப், பகர்ந்தவுப காணங்கள் புரிவித்துக்
கபாடம் படியவடைத் திடப்பண்ணிப் படாம்பீடம் படுத்தே. (௩)

படுத்தமலர்த் தவிசின்மிசை யாற்கீழன் றிருந்து பாஞான கதியளித்த பாமனையன்
புடனே,யடுத்தநெறி யருச்சித்துத் திருஞா னமுன்னீ ரடைகாயும் படைத்தேத்தி யமுது
செய்வித் தகற்றி, விடுத்தலா முச்சுத்தி புரிந்தருள மைந்தன் விழியருளி யெனையாள
வேண்டுமென வணங்கி, வெடுத்தருளிங் கிவன்பாசம் விடுத்தருள்செய் நீயே என்
னுடைய ஞய்நின்ற தன்மையிலென் றிறைஞ்சே. (௪)

இறையான தருள்பெற்றுத் தனக்குமைந்தன் முகமாயிருத்தியவன் காத்தலரிட் டிலங்
குருவமெரியக், குறையாத கொழுந்தினதா யண்டமுறநினைவிற் கொண்டிருவென் றாசி
ரியன் குறிவழியை நிகழ்த்தி, நிறையாரு முணர்வுடனே புணர்ந்து விழிமலர்ந்து நின்மல
மாய் மும்மலமு நீங்கநோக்கி, மறையாவும் பரவுதிரு வஞ்செழுத்தைமாறி மைந்தனுக்கு
முரைப்பித்து வாய்மை வகுத்துணர்த்தே. (௫)

உணர்ந்துணர்த்தப் புணர்ந்துடற்கட் பயனுகரு முயிரொன் றுண்டதுநீ கண்டு
கொளென் றுண்மையிலெந் தவத்தை, புணர்ந்தபதி யுபகாரம் போதவுரு முழும்மைப்
பொருவில்பயன் றிருநாமம் புனிதனிடைப் புணர்ச்சி, யணைந்தவகை யிவையொன்பா
னறியு மவற்றிவற்று ளல்லாதுந் தெரிவித்தற் காரம்பித் ததன்மேல், மணந்தகுநின் கா
மலர்தூய் வணங்கென்று வணங்க வந்தனைதன் முந்தமைந்தன் மலரடிக்கு மாபே. (௬)

மாபாரும் பூசைமுடித் தெழுந்தருளப் பண்ணி வைத்தபரி கலமருளார் மைந்தருக்
கும் வழங்கி, யாசாரு மாசானு நுகர்ந்தவடைகாயு மனைவர்க்கும் பகுந்துதவி யதுதானு
மருந்தி, யிரவான தகல்பகலி லருண்மைந்தற் கமுதீந் தினஞ்சேர்த்திக் குறிகூட விறை
வனருணி கழ்த்தித், திருவாரும் பொருணூலிற் சேர்ந்தகருத் தின்றேற் சிவப்பிரகா சத்தி
னுண்மை செம்மையினிற் செலுத்தே. (௭)

தேசமிகு மருட்பயின்ற சிவப்பிரகாசத்திற் றிருந்துபொதுச் சங்கற்ப நிராகாணந்
திருத்தி, யாசிலருள் விணுவெண்பாச் சார்புநூலா லருளௌிதிற் குறிகூட வளித்து
ஞானப், பூசை தக்க காரணமுன் புகன்றதனிற் புகுந்து புணர்விக்கச் சிவஞான போத
சித்தி வழிநூல், மாசில்சத மணிக்கோவை முன்னூல் சான்று மருவுதிரு முறைத்
திரட்டு வைத்தனன்மன் னுயிர்க்கே. (௮)

ஞானதீக்ஷா விதி முற்றியது.

---

# போ ஜ ன வி தி

திருவருளர்ச் சனையிதனைச் செலுத்திமுன்னீ செய்தவினைப் பயனருந்தச் சிந்தையாறி
யிருவருமே யொருவனுள னில்லாதில்லை யிடவுரியோர் கொடுவாநின் றிடுவிப்பிக்கு
மருளுடனே யிடுபவர்தா மாணைவாணு மவரேவல் புரிதுமினி யன்றியப்பா
லொருவரிதென் றுள்ளதிட வல்லதுண்ணு முண்மையூ ணிடுசோறென் றுரைக்குமன்றே.

இத்தவகை கண்டுமுன திடுவோர் தங்கட் கிச்சைபகர்ந் தறுசுவையி னின்பமெய்
திச், சிந்தனைகொண் டிலாதபொருட் கிரங்கி யுண்ணுந் தேட்டுணு மிடுசோறுச் செப்பு
மித்தாற், பந்தமுறும் வினைகழிந்தாற் றம்மி லொப்பர் பரனவனு முன்னவனைப் பணி
கொண்டாளும், வந்தபடி கொடுமேனு மிதுவுங் கொள்ளார் வாய்மையார் தாமண்ட
தூய்மை யோரே. (உ)

பண்டைவினைப் பழஞ்சோறுய்ப் பானுக் கீந்த பாத்திரசே டஞ்சடாப் பையு
ளேய்க்குக், கண்டகடு வெனக்கொண்டு காற்குமீத்துக் கைப்புனல்சூழ்ந் தண்ணீர்நோய்
கனலமாந்தி, யுண்டுகுடித் தசித்துறுஞ்சி யுட்கொண்டாலு மொருநாளுந் தீராத வுறு
நோய் கூட்டோ, டண்டனகற் றினியென்றைஞ் செழுத்து மோதி யருந்துமருந் திடு
மளவு மாறுந் தானே. (௩)

ஆமுதா நீருந்தி யெச்சிலச்ச மகற்றி யடைகாய்நற் கடுக்காய்சுக் கடுத்ததொன்றை
மென்று, கூரியபே ருணர்வுடனே தூங்கிக் கங்குற் குளிர்வெம்மைக் கிசைபூசை
கொள்ள நல்கி, யோருணர்வு நிவேதியா தண்ணு வாய்மை யுடையையா யுயர்ஞான
யோக முற்றுச், சாருமரு ளித்திரையுற் றுணர்க ஞானச் சரிதமிது மெய்கண்டான்
சந்தா னத்தே. (௪)

போஜனவிதி முற்றியது

---

# ஞானபூசைத் திருவிருத்தம்

பணித்தவரு ளுடன்சந்தி பண்ணி ஞேர்கன் பயில்காலந் தருசந்தி பகர்வன் கங்குற்,
புணர்த்தியருக் குமவுடலாற் போகந் துய்த்துப் பூதவுடற் போகத்திற் போத நாத,
னுணர்த்தியபோ துணர்ந்துணர்வை யுயிர்சந் தித்து வொண்புனலா லுடற்சுத்தி யோங்கு
வித்துக், கணக்குறுநீ றிடக்கையி னைந்தெழுத்தாற் குழைத்து கலந்தொருமை திரிபுண்
டாங் காட்டத் தீட்டே. (க)

ஆசொழிய வான்மசித்தைச் சுத்த வித்தைப் பிரியா தறியுநெறி யமர்ந்துசிவ முனு
பூதி யாகப், பேசியமுத் தத்துவத்தா னீர்குடித்துச் சுத்தி பெருக்கியிமிர்ந் திரேசித்துப்
பூரித்துப் பிடித்து,மாசகல மானதமா மந்திரத்தை யுரைத்து வளர்தார மிருகாமு மன்னி
நீவித், தேசதமாங் குலிகளிலுந் திகழங்கங் களிலுந் திசைமுழுது முடல்முழுது மணி
திருமந் திரமே. (உ)

நிலம்புனல்தீ கால்வான்று னிகழுமிரு சுடராய் நிலவிருநான் குருநினைந்தா னிழற்
கடவுள் பதமுங், கலந்தபரா குரவரவ ரிருவகையோர் தாளுங் கருதருநற் றேசிகன்றன்
கழலிணையுங் கருதித், துலங்கிடுமோ விளக்கியந்நீர் தெளித்துக் கொண்டு தூநீரா லாசமன
சுத்தி செய்து, கலங்கொளியா தனம்புரிந்து நாதனிட நணுகி நாட்டமுறச் சூழ்ந்துமுகங்
காட்டிட் டாயே. (௩)

இற்புகுந்து பதம்விளக்கி யிருந்து நீரிட் டிலங்குபிரா ணுயாம நியாத மெய்தி
யற்கியமொன் றுக்கியந்நீர் சுத்தி சேர்வித் தண்ணல்திரு வடிவிளக்கி யலர்கள்சாத்தித்

சிற்பரமாங் தற்பரத்து ளழுந்தி நீங்கும் நீங்ககலத் தாங்கொருமை நிரிந்த தாகிற்
சொற்பதமா ஞானநூ லோத லாதி தொடங்கவையு மடங்கிலருட் டொழிற்று வக்கே. (௪)

நீராடித் தறபித்திற் புகுந்தி ருந்து நியமஞ்செய் துயிரையங்க நியாத மெய்தி
யாராகற் பாத்தியா சமன மொன்றி லர்க்கியமொன் றினிலமைத்தர்க் கியச லத்தாற்
சீராருஞ் சன்மார்க்க மான ஞானந் திகழுந்தென் றிசைவாயில் சுத்தி சேர்வித்
தோராருந் துவாரமிது பாரித் தாண்ட வெழிற்குரவ ரெழுவரையு மிறைஞ்சி டாயே. (௫)

விரவுமுமா பதிசிவனன் மறைஞான சம்பந்தன் மேவுபரத் தருணந்தி மெய்கண்ட தேவன், திருவளரும் பரஞ்சோதி சத்தியமெய்ஞ் ஞான தெரிசனிகள் பரநந்தி திருவாயி லிருபான், மருவுறவுள் வலமிடமா முன்னர்வட முகமாய் வருபவரை யபிமுகமாய் மன்னுவிக்க வுரைசே, ரருள்புரிமுத் திரையினுருத் திரமெதிரஞ் சலிசே ரைஞ்செழுத்து நந்திக்கா வனைவரையு நிறுத்தே. (௬)

சந்தான குரவரிவர் சமயாங்க மக்கந் தக்கவட நீறுமுறை தழனிருதி குடபால்
வக்தாரில் சம்பந்தர் வாகீசர் பெருமாள் வாதவூர் மன்னிவர்கள் வாயுமுதல் ஃடபாற்[த்தா
செந்தாது மலரானற் சமயகுர வரையுஞ் சேர்த்துகதம் பெயர்முடிவிற் றிகழ்திரு மந்திர
னந்தாபங் கழிந்தகல மொழிந்துகொள்பூந் தவிசி லுதனுக்கா தனமாக நடுமலராவிறைஞ்சே.

அஞ்சலிசெய் திருந்துடல நானல்லேன் ஞான வண்ணலது யானெனதென் றிடவமைந்
புஞ்சமலி தனுகரண புவன போகம் பொய்யெனமெய் யுணர்த்தியவப் போத மேநங் [த
தஞ்சவுட லிந்தவுட லெடுத்த வீடு தானழியு மளவுமகிற் றங்கு வோர்போல் [றே.
வஞ்சமுடன் மாதுமெனு மிதுமேல் கொள்ளும் வாய்மையது பூதசுத்திப் பான்மை யன்

ஓங்குடலந் திருக்கோயி லுள்ளிடமுன் னிடமா முட்டொழிலும் புறத்தொழிலு முரியவரே புரிவார், தீங்கிலுயிர் சிவலிங்கஞ் சிவன்சீவன் யாதுஞ் செயவேண்டா பசு ஞானஞ் சிவஞானஞ் சிறந்த,பாங்கதுநம் மன்பனவி லுபகரண பூசைப் பரிசதுநற் றரிசன மெய்ப் பணிமடங்கத், தூங்கிடநம் மின்புருவச் சுடராய்நிற்குந் தொன்மையதந் தரியாகத் துறைய தன்றே. (௯)

ஞானமே னியனைனனி நாட வேறோர் ஞானநமக் கின்றதுதா னுமா யேகிற்கு
மானபோ தர்ச்சித்த லரிதாமென்னு மந்தரி யாகமாகும் போதத்
தானமே வின்வினைகன் பலியதானுற் றன்செயலற் றவனிறைவிற் றூனு மூழ்கிப்
போனபோ தறியாத சிவானு போகம் புணர்பூமி சிவபூமிப் பொலிவ தன்றே. (௰)

நாலிரண்டு திருவுருவ நோக்கி நோக்கா நலங்கொடிர வியசத்தி நயந்து சென்னிப்
பாலிலங் கர்க்கிய மலரா லரனை யர்ச்சிப் பத்தருமந் திரசுத்தி பயிற்ற நாதன்
மேலுகந்த மலமொாதுக்கி யுருவ நோக்கி விமலனிறை யுணர்ந்தெவையு மேனி யான
சீலமுமங் கருவுதிரு வுருவ மான சிறப்புமுணர்ந் திலிங்கசுத்தி சேர்த்தி டாயே. (௧௧)

இன்புருவச் சிவன்படைத்தற் கிச்சை காலத் திசைவுழிவித் தியாதேகி யாகியெழிற் கிரியை, முன்பெருக்கக் குடிலையினை யடைந்து நாத மூந்துவிந்தக் காமனுநன் மொழி முறையே வகுத்துத், தன்பொருவின் மந்திரத்தாற் சதாசிவாதியுதவிச் சகவிரிவு தருமாற் றிழ்ச்சரி யாதிநால்வர்க், கன்பமரத் தன்பமலம் பவமிருதி வழிதீர்த் தறமுரைத்த கருணை யனை யருச்சியுமிச் சியுமே. (௧௨)

ஆதியா தாரசத்தி குடிலாந்தம் பீட மாதனமேற் பாவித்தை யறங்கடரு மூர்த்திச், சோதியது மூர்த்திமா னின்ப மூர்த்தித் துணைவனென மும்மலர்க டுதையச்சாத்தி, வதடியென் றிடிலடிவே னெனதறகின் றதுதா மெங்ஙனமா மருண்முகஞ்செ யியல்பு திரு முகமா, மூதுயிர்மே லேதாகு மதுமுடியா மிவற்றுண் முன்னுதவு பாத்தியா சமன மீயு முறையே, (௧௩)



ஆயதா பாதியனித் தலரகற்றி யேந்தி யருளுருவிற் றயிலங்காப் பவைசாத்திக் கழித்து, நாயன்மார் ஐஞ்சிலிரண்டு பேருரையார் நவையெனமற் றிரண்டொன்று நயந் துளதான் மூலக்கண், பாயுநீர் கன்னலினீரிள நீர்மும்மைப் பழங்கொணீர் மதுநீர்முன் பாரித்தாட்டி, மேயவே லாதேல்நீர் வேண்டளவும் பொழிந்து விளங்கொலியல் நீர்புலா விரித்துச்சாத்தே. (௧௪)

வாசமலி மலர்சாத்திச் சேலை சாத்தி மலர்த்தவிசி லிருத்தியிரு மலாடிகள் விளக்கி
யாசமனந் திருநீறர்க் கியமு நல்கி யடலேறு மிருடிகளு மடைவே போற்றிப் [தித்
பூசையன லாகையினற் றேசிகர்க்கு நல்கிப் புரிந்தொருமை நினைந்திறைமுன் புனிதமாக்
தேசுமிகு திருவமுது தெண்ணீரேற்றித் திருந்தியவர்க் கியசலத்தாற் சுத்திசேர்த்தே.

இனக்குநெறி யருச்சித்துக் காவல்வளை யமுதீந் திறையமுது செயவிருகை யிரந் துரைத்துத், தனக்கமைய விளக்கியகைச் சந்து கந்தந் தாரணிதாம் பூலாதிதயங்க நல்கி, யனைத்துலகுந் தருமாற்கீழ்த் தென்முகமண் டபத்து ளன்பர்தொழ வீற்றிருக்கை யறிந் தடிகள் விளக்கிக், கனற்கமழுந் தூபதியா லத்தி நீறெண் கவரிகுடை கண்ணாடி கருதிச் சேர்த்தே. (௧௬)

ஐயைந்தா மக்கவட மங்குநான் கணிந்து வங்குட்டங் கொண்டொருநான் கருணமங் கணித்துக்,கையெஞ்சா மலமொடஞ் சலிசெய்து கடவுள் கற்பித்த தொழிலிதுநீ கண்ட பண்டங், கொய்யும்பூ மலராதி கலாதி நாதன் கொளுவியபோ தெனதுணரவுள் குலாவு பூசை, செய்கென்று லென்செய்கே னிட்டபணி யுருவச் செல்வநீ கொள்கென்று திருமுன் சேர்த்தே. (௧௭)

எழுந்தலர்தூய்ப் பணிந்திருந்து நியாத மெய்தி யெழிற்குரவ ரிறைவன்று ளெய்த வேத்தி, மொழிந்தலர்கொ யிலையணுகப் பண்ணு வித்து முன்னுதவு பாத்தியா சமன வர்க்கிய முறையே,பொழிந்தலர் தூய்ப்பீடத்துத் தண்டிலத்து மிறைஞ்சிப் யோக்குவர்க் கிய ஞானபூசை யிதுபுனிதற், கழுந்துபர குரவர்தரு முச்சிட்ட நுகர்தற் காமல்ல மாவிய மென் றறைந்தன வாகமமே. (௧௮)

ஞானபூசைத் திருவிருத்தம் முற்றியது.

---

## ஞா ன பூ சா க ர ண ம்

திகழ்சிவப் பிராகா சத்திற் றிருந்திய வகையா லுண்மை
நிகழ்பல ருடற்செய் கன்ம நேரிடு மளவு முன்போற்
றகவினை புரியார் துய்ப்புந் தவிர்தரா தனுவெடுத்த
வகமென மருவி யாவு மாற்றுமா சாற்ற லுற்றாம். (௧)

அன்புறு தொண்டர் யோகார்ச்சனை யோர்கள்பூசை
முன்புறு தொழிலோரேது முயல்விலோர் முதிர்ந்தபாகத்
தின்பமா ஞானவாய்மை யெய்திமுற் செய்தியாவும்
பின்செய வுளதெனன்றிப் பெற்றியாய் வுற்றும்யாமே. (௨)

ஞானிகள் சந்தியென்று ஞானிகள் பூசையென்று
மானவஞ் செழுத்தாற்செய்க வங்கை நியாதமென்று
மீனமி லகப்புறங்க ளியாவுமா மென்றுஞான
நூனவின் றனகண்டாய்வா னுடங்குளந் துடங்கிற்றன்றே. (௩)

மன்னிய கன்மகாண்ட மருவரு ஞானகாண்ட
மென்னவேறிரண்டு மென்பா ரிரண்டுமொன் றென்பரொன்றை



187151

யுன்னரு முபாயமொன்ற துபயமுற்றொழிந்தோ மென்பா
ரன்னதும் புரிவோமென்பா ராயின ரளவிலார்கள். (௪)

என்றிவை யாவுந்தேர்வுற் றிறைவன தருளேயுன்னிச்
சென்றுள நாயன்மார்தந் திகழ்திரு நெறியைச்சேர்ந்து
நின்றது நின்றுமீள நிகழ்சிவ தன்மஞான
மன்றிது வென்றுரென்றின் றதனையாய் வுற்றதன்றே. (௫)

திருநெறி யருளேகண்ணாச் சென்னெறி சிவதன்மத்திற்
றருநெறி யருள்பொருந்தச் சத்தவிற் பக்திபண்ணி
யொருநெறி யாக்கலாதிங் குறுநெறி யொழிந்துசைவப்
பெருநெறிப் பிணக்கிலாத பிரானெறிப் பின்செல்வாமே. (௬)

அந்தண ரரசாதி யருமறைத் தொழில்வேறாகி
வந்தவா சரியையாதி வளர்சதுப் பாதமாகத்
தந்தனர் திரிபதார்த்தந் தாமொரு பொருளாகாதான்
முந்திய பாதநான்கு முறையினாற் றுறையினாமே. (௭)

முற்பவ மெவற்றுமுற்று முதுதவ வலியாற்சைவத்
தப்பருஞ் சரியையாதி சரித்தருள் சார்வாலன்றிச்
செப்பிய தொழில்செய்யாதே திருவருள் சேர்வோருண்டே
லிப்பவ மொழிந்தமுற்பா லியற்றின ரென்னலாமே. (௮)

செய்திடிற் பழுதாமென்ற பூசைக டவஞ்செபாதி
யெவ்விடத் தினுநிறைந்த விறைவனோ டிவனமுந்தி
மவ்விடத் தில்லையென்ற தத்தனை யன்றிஞானி
கைவிடக் கடவனென்ற கருத்துநூல் விரித்திடாவே. (௯)

போககா ரணமா மேனி புண்ணியன் கொண்டானென்று
ளூகியா முத்திகாம மொழியவு முரியரென்றுந்
தேகியா யழைப்பதந்தச் சிற்பரம் பொருளையென்ப
ராகையா லாகமியாவு மவர்கள தாகுமன்றே. (௧௦)

அண்ணலு மனேகமேனி யானபி னொன்றிற்பூசை
பண்ணின னென்றுலல்லா தவையவன் பழித்தானோமோ
நண்ணிய வளவைகாட்சி நாட்டமான தந்தான்ஞானக்
கண்ணினை யுதவுமென்றுற் கடவுளை விடயமாக்கே. (௧௧)

கன்னலின் சுவையை நச்சுங் கருத்தின ரும்பரேனுந்
தன்னுரு வொழியக்கொள்ளுந் தகைமைய தன்றுமென்றுற்
பன்னரு முணர்வையாசைப் படுபவர் பற்றற்றுலுந்
தன்னுரு வொழியக் கொள்ளுந் தகைமய தன்றுமன்றே. (௧௨)

எவ்வுல கத்துமூர்த்தி யேதுகொண் டிவனியங்கு
மவ்வுலகத்துமேனி யதுகொண்டங் கமருமீசன்
செவ்விய துலகுக்க பரமெனத் திகழ்பவற்றி
லொவ்விரு பாமொன்றுதே லொழிந்தவை யொழிந்திடாவே. (௧௩)

நிறைந்துயிர்க் குணர்வாய்நின்ற நிலையுறின் ஞானபூசை
யுறைந்ததோ ரொளியதாக்கி யொடுங்கிடின் யோகபூசை



யலைறந்தவை மூர்த்திசேர்க்கி லந்தரி யாகபூசை
புறந்திகழிலக்கின் மூன்றும் பெறிற்புறப் பூசையாமே. (௧௪)

இதுவிதி யென்றறிந்து மிதுவல்ல திதனினுள்ள
ததுகொள்ளக் கடவோமென்றென் றர்ச்சனை செய்வோரங்கைப்
பொதிதரு திரளைவிட்டுப் புறங்கைநீ ரிறங்கநக்கு
மதியின ரென்றுலென்றுன் மாற்றமிங் காற்றலாமே. (௧௫)

ஆருயிர்ச் சிவத்தைவிட்டுப் புறச்சிவ மருச்சிப்பானே
லீருயிர்ச் சிவமுண்டாகி லிசைந்ததன் றெங்குமுள்ள
தோருயிர்ச் சிவமேமற்றுப் புறச்சிவ முருச்சிவத்தின்
பேருயிர்ச் சிவமிதென்னிற் பெறுதது பிணக்குநூலே. (௧௬)

காத்தரு ளும்பர்மேனி காட்டபா டாணமென்று
நாத்திக முரையார் நல்லோர் நாதனு மும்பர்மூர்த்தி
பார்த்திப மிவற்று லின்னே பண்ணுமென் றளித்தபண்பா
லேத்துவோர்க் கடையாளத்தோ டியற்றிய வென்னலாமே. (௧௭)

மற்றிவை ஞானிகாணு னென்பது நனவோன் வாழ்வு
பற்றிய கனவோன்காணு னென்பது பழுதோபண்டைக்
குற்றமோ கைவிட்டானோ கோளினி யிலனோகூடி
யற்றது மிவற்றிலொன்றோ டல்லவோ சொல்லீரே. (௧௮)

புரையற வுணர்வாயெங்கும் புண்ணிய னின்றுனென்று
அருளுரு வல்லாதில்லை யாயினு மடையாளத்தாற்
பானிவ னென்போர்க்கந்தப் பார்த்திப வுருவேஞான
வுருவென வுருகிமெய்நின் றுவந்தருள் செய்யுமன்றே. (௧௯)

தீர்த்தனை யுளத்துநின்ற சிவனைவிட் டுலகிற்றீர்த்த
நீர்த்தடந் தோய்வாராவி நீங்கியவுடல் கொண்டாடு
மாத்திர மதியோர்நீரின் மண்ணிலோர் வரிசைவைத்த
சாத்திர முயிரில்வைத்த சாதமோ தவிர்வதின்றே. (௨௦)

மதுமலைந் தலையுதென்றே வவ்வுவான் வரும்வழிக்க
ணதுபுல ரெருக்கங்கோட்டொன் றமர்தல்கண் டகல்வோரங்கைக்
கதிர்மணி யன்றித்தோன்றுங் காசமா மணிகொள்வோர்போ
னதிபதி தேர்வோர்வீடு நண்ணுமா றெண்ணுவோரே. (௨௧)

மறைதரு சடங்கள்கண்ணில் வன்னியின் மன்னுஞ்சைவத்
துறைதரு தொழிற்குவித்தியா தேகத்திற் றோன்றிநிற்கு
மறிகுறி யொழிந்தவற்றி லப்பிறப் புந்திக்கந்தக்
குறியுரு மருவுஞானிக் குயிரினிற் குளிருமன்றே. (௨௨)

எங்குமாய் நிறைந்தநாத னேத்துவோர் கொண்டமூர்த்தி
தங்கியே திகழுமங்கி தான்றனி காண்பொணாதா
லிங்கது திடமுண்டென்ப தமையுமே லடைபாசங்கள்
செங்கலா முருட்டுத்தீயுந் திண்ணமென் றெண்ணலாமே. (௨௩)

ஞானவா ரமுதமுண்டார் நயந்தது நுகர்ந்துவாழு
மூனமில் யோகச்செய்தி யொழிவதுண் டாகவுண்டா

மீனமில் தொழில்பின்னின்று முண்டெனி லெய்திற்றின்று
மானமின் ஞானயோக மல்லதொன் றறிதராதே. (உச)

கற்றமந் திரமும்வானிற் காலுமெக் காலும்வாக்காற்
சொற்றரிற் பலிக்குமங்கை சுழற்றிக்கொண் டொழும்பிலாற்று
மற்றிவை போலஞான யோகரீ மருவுகான்மே
லுற்றிடு மனதிலின்ப மொழிந்தவை யொழிந்துபோமே. (உரு)

கற்பெய ரொப்பவொப்பக் கழிக்கரை கற்பொறுத்தொன்
விற்புழிப் பயனெய்தெய்து மிடுமொளி மணிகற்றுங்கும்
பொற்பினின்மயமாய் நொய்தாய்ப் பொருளுமெண் ணரிதாமென்று
லற்புத ஞானயோக மார்கொலா தரியாதாரே. (உசு)

உடற்குண தாண்டும்பண்டை யுறுதியிற் செறிஇயாயி
னடுத்திகழ் ஞானவாய்மை நழுவிய தென்பரன்றி
யடுத்தவை நொய்திலெய்தி லர்ச்சனைதிகள் கொளாஞேர்
விடுத்திட லாவதின்றேன் மெல்லிதின் வல்லதாற்றே. (உஎ)

செய்தொழின் முடித்துமாறுத் திரிகையு மிங்குச்சேர்ந்த
வையமில் கலனும்போல வருவினை வருவதானுற்
சைவமுன் புரிந்தமும்மைத் தன்மைவா தனையுஞான
மெய்தரு சுவடுங்கூடி வருமிது வியம்புமன்றே. (உஅ)

இன்பினி தென்றுவக்கு மிவனவன் றன்னையப்போ
தன்புறு தொழிலாலூழ்வந் தணைதரு மதனுலாகத்
தன்புற ஒருவைத்தாழ்வா தலத்தவா தம்மிற்றுஞ்செய்
பின்புறு தொழிலாலின்ப முன்பினும் பிறக்குமன்றே. (உகூ)

எண்டொகை யுரைப்பித்தோர்போ லியம்பின வெண்ணியெண்ணி
மண்டிக ழலடுவைத்து மற்றையத் தொகைவழாமற்
கண்டுளந் தெளிதல்போன்முற் கற்றசொற் பொருள்கருத்துட்
கொண்டுணர் பவர்க்கியாவுங் குறிவழி நடத்தலாமே. (கூ0)

---

# திருவிசைப்பா ஆசிரியர்கள்

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகர்]

## கண்டராதித்தர்

[குறிப்பு:—திருவிசைப்பா ஆசிரியர்கள் வரலாறுகள் இதுவரை விரிவாகவும் தெளிவாகவும் வெளிவரவில்லை. இதுமுதல்தொடர்ச்சியாக இவை வெளிவரும். இக்கட்டுரைகளை மீண்டும் வெளியிடும் உரிமை கட்டுரையாசிரியருக்கே உரியது. வெளியிட விரும்புவோர் திரு. தேசிகர் அவர்கட்கு எழுதி அநுமதி பெறவேண்டும்.—பத்திராசிரியர்.]

### தோற்றுவாய்

சைவ நன்மக்கள் தம் உரிமை நூல்கள் எனக் கொண்டாடுபவை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆதிய நூல்களாம். இவற்றுள்ளே சமய குரவராகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளியவை தேவாரமும் திருவாசகமுமாகும். இப்பெரியார்களது வரலாறுகளைப் பலபடக்கேட்டும் படித்து மிருகின்றோம். இவர்கள் அருளிய பெருநூல்களுக்குத் திருமுறைகளென்று பெயரிடப்பட்டும் அவை ஒன்றுமுதல் எட்டுவரையும் எண்ணப்பட்டும் வருகின்றன.

திருவிசைப்பா, திருப் பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறையெனப்படும். இவ்வொன்பதாந் திருமுறைப் பதிகங்களைப் பாடியோர் ஒன்பதின்மரென்ப. அதுகொண்டுதான் இதனை ஒன்பதாந் திருமுறை யெனப் பெரியார் வகுத்தனர்போலும். இவ்வொன்பதின்மராவார் திருமாளிகைத் தேவர், சேந்தனுர், கருவூர்த் தேவர், நம்பிகாடவர்கோன், கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனுர், புருடோத்தம நம்பி, சேதிராயர் எனப்படுவர். இதனை,

செம்பொன் மணியம்பலத்து நிருத்தனுர்க்குத்
திருவிசைப்பா வுரைத்தவர்தந் திருப்பேர்
[சொல்விற்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனுர் கருவூர்த் தேவர்
நம்பிகாடவர் கோனற் கண்டராதித்தர்
நன்குயர் வேணாட்டடி கடிருவாலியமுத
ரம்புவியோர் புகழ் புருடோத்தமர் சேதிராய
ராகவிவ ரொன்பதின்மர்தா முறைகண்
[டவைவே.

என ஒரு செய்புள் கூறும். இவ்வொன்பதின்மரைப் பற்றிய சரிதங்கள் இயன்றவரை ஒருவாறு தொகுத்து ஈண்டு வரையப்படும்.

### வமிசாவளி

முதன்முதலில் கண்டராதித்தரைப் பற்றிவிசாரிப்போம். இவர் திருவிசைப்பாவருளிய நாயன்மாருள்ளே ஐந்தாவதாக நிற்கின்றுர். இவ்வாசிரியன்மார் வைப்பு முறையை நோக்கினுல் இது ஒரு காலவரையறையை யொட்டி நிற்பதாகத் தோற்றுகிறது. இவருக்கு முன் நால்வரும் இவருக்குப்பின் நால்வரும் வாழ்ந்து சிவபெருமானது திருவடி நீழ லெய்தினர் என்று கருத இடந்தருகிறது. ஆகவே நடுநிலைத் தீவகமாக நிற்கும் இப்பெரியாரது சரிதத்தை முதற்கண் எடுத்துக்கொண்டதற்கும் இது ஒரு காரணமாகும்.

ஆயினும் இப்பெரியார் ஒரே யொரு பதிகமே பாடியுள்ளார். அது பத்துப் பாசுரங்களை யுடையது. பத்தாவது பாசுரத்தின் இறுதியில் 'காரார்சோலை கோழி வேந்தன் தஞ்சையர் கோன் கலந்த வாராவின் சொற்கண்டராதித்தன்' என்று தன்னைக் கூறிக் கொள்கின்றுர். இதனுலே கோழி யென்ற சிறப்புப் பெயரினை யுடைய உறையூரிலே யரசாண்ட சோழவமிசத்தினராயும் தஞ்சைக்கு அரசராயுமிருந்த கண்டராதித்தர் என்பது விளக்கமாகிறது.

சோழவரசர் பரம்பரையிலே இப்பெயரினை யுடையார் ஒருவரே யுண்டு. கரிகாற் பெருவளத்தானுக்கு முன்னும் பின்னுமிருந்து சோழநாடாண்ட சோழ அரசர்களுக்குப் பின் தமிழ்நாட்டைப் பலகால மாண்டவர்கள் பல்லவ வமிசத்தினர். அவர்கள் வலிகுன்றவே பாண்டியரும் சோழரும் தலையெடுத்தனர். அவர்களுள்ளும் சோழரே ஆதிக்கம் பெற்றனர். பிற்காலத்தில் முதன்முதல் சோழ அரசாட்சியைத் தாபித்தவன் விஜயாலயன் என்பான். அவன்மகன் ஆதித்தன்; அவன் புத்திரன் பராந்தகன். இவனுக்கு மக்கள்ஐவர். அவருள் இரண்டாவது புத்திரரே ஈண்டு கூறப்படும் கண்டராதித்தராவர். அவ்வடைவு வருமாறு:—

விஜயாலயன்
|
மகன் ஆதித்தன்
|
மகன் பராந்தகன்
|
ராஜாதித்தன் — கண்டராதித்தன் — அரிஞ்செயன் — உத்தமசீலி — அரிகுலகேசரி

### இளமை

கண்டராதித்தர் இளமையிலே அரசர்க்குரிய வில் வாள் வித்தைகளோடு நல்ல இலக்கண இலக்கியப் பயிற்சியுடைந்திருந்தார். சோழ அரசர்களெல்லாம் சிவபெருமானிடத்து மாறா அன்புடையவர்கள். ஆதலினுலே இவரும் மற்றக் கல்வியோடு சமயக் கல்வி

யும் வாய்க்கப்பெற்றவ ரென்பது அறியக் கிடக்கின்றது. உரிய பிராயத்தே திருமணம் செய்விக்கப்பெற்று இல்லறம் நடாத்துகின்ற காலத்திலே இவரது முதன் மனைவியாரான வீரநாராயணியார் என்பார் கணவனை யொப்ப சிவபத்தியில் ஈடுபட்டவராய்த் திருக்கற்குடி சிவாலயத்தில் சில நிவந்தங்களை நிறுவினாள். அவள் சிவபெருமானது திருவடி நீழலை யடைந்தகாலத்து கண்டராதித்தர் மழவரையன் மகளார் செம்பியன்மாதேவியாரை மணந்தனர். இவ்வம்மணியார் திருக்கோயில்களுக்குச் செய்த தருமங்கள் பல. இவ்வாறு ஒருவர் மனைவிமார் பல தருமங்களைச் செய்யவேண்டுமாயின் அவர்களது கணவரும் ஒத்தமனதுடையவரா யிருந்தாலன்றி நடவாது. ஆகவே இவரும் சிவபத்தி மிக்குடையாரென்பதுஉண்மை. கல்வியில் மேம்பாடுடையவ ரென்பதற்கு இவரது பதிகமே போதிய சான்றும். நமது துரதிர்ஷ்டவசமாக இவர் அருளியவை முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை, இவர் அருளிய ஒரு பத்துப் பாக்களே நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றின் சொல்லின்பமும் பொருளின்பமும் ஓசை நயமும் கண்டோர் வியக்கத்தக்கன.

### அரசுரிமை யெய்தல்

சோழ பெருமானடிகள் என்று சிறப்புப் பெயர்பெற்ற பராந்தகன் கி. பி. 907ஐ ஒத்த 829ம் சகவாண்டு சோழவரியணை யேறினான். இவன் தனது பிதாவைத்த நாட்டுடனில்லாமல் மேற்கே இப்பொழுது மைசூர் இராச்சியம் என வழங்கும் கங்கநாட்டையடிப்படுத்தி அதனை வாண வமிசத்தினருக்குக் கொடுத்துத் தன்கீழ்ச் சிற்றரசராக்கிக் கொண்டான். தெற்கே பாண்டிநாட்டை வென்று அப்பாண்டியர்களுக்கு உதவி புரிந்துவந்த ஈழநாட்டரசர்களையும் (லங்கைத்தீவு) வென்றான். இவ்வாறு இவன் பேரரசாய் நின்று 41 ஆண்டு அரசாட்சி புரிந்து கி. பி. 940-41ல் விண்ணுலகேகினன்.

கங்கபாடி, மகாராஷ்டிர தேசத்தையாண்ட இரட்ட அரசர்களுக்குச்சொந்தமானது. அதனை யாட்சிபுரியத் தொடங்கிய மூன்றாங்கிருட்டினன் என்னும் கன்னரதேவன் கங்கநாட்டிற்குப் பதிலாகத் தொண்டை மண்டலத்திற் புகுந்தான். இதனைக்கேட்ட சோழ பெருமானடிகள் கன்னரனைத் தோற்கடித்து வீரசோழனென்ற பட்டம் சூடினான். இவன் அதுமுதல் தொண்டை மண்டலத்தைப் பாதுகாக்கத் தனது மூத்த மகனான இராஜாதித்தனை ஒரு சேனையோடு திருவெண்ணெய் நல்லூரில் நிறுத்தியிருந்தான். அதுமுதல் கன்னரன் பரதேசி வேடம்பூண்ட ஓர் ஒற்றனைச் சோழநாட்டில் வைத்திருந்தான். அவ் வொற்றனால் பராந்தகன் இவ்வுலகவாழ்வை நீத்தானென்று கேட்டவுடன் கன்னரதேவன் தொண்டைமண்டலத்தில் மறுபடியும் நுழைந்தான். இதனைக்கேட்ட இராஜாதித்தன் தனது படையோடு சென்று தக்கோலத்தில் இரட்டசேனையை முறியடித்தான். ஆயினும் கன்னரனது மைத்துனனான பூதுகன் என்பவனால் வஞ்சனையாகக் கொல்லப்பட்டான். இராஜாதித்தன் வீரசொர்க்கமடையவே, இளவலான கண்டராதித்தர் அரசுகட்டிலேறினர். இவ்வாறானது சகவாண்டு 864க்குக் கி. பி. 942 ஆகும். கன்னரதேவன் தொண்டை மண்டலத்தைப் பிடித்துக் கொண்டதனால் கண்டராதித்த தேவர் அரசாட்சியிலிருந்த சோழ இராஜ்யம் குறுகிவிட்டது. மேலும் இவர் சிவபக்தியில் ஈடுபட்டிருந்த படியால் பலரோடும் எதிர்த்துப் போர்புரிய விரும்பவில்லை யென்று தெரிகிறது. சோழர்களின் கீழ்ச் சிற்றரசர்களாயிருந்த பாண்டியர்களும் சுயேச்சை யடைந்துவிட்டனர். கங்கநாடும் போய்விட்டது. ஆகவே இவர் அரசாட்சிக்கு வந்தபோதுமிருந்திருந்தது வெள்ளாற்றின் தெற்கிலும் மருதயாற்றின் வடக்கிலுமுள்ள பூமியான சோழநாடேயாம்.

(தொடரும்)

## சைவ சித்தாந்த மகா சமாஜத்திய இருபத்தாறும் ஆண்டு உத்தியோகஸ்தர்கள்

[குறிப்பு :—கீழ்வரும் பெயர்கள் ஒவ்வொன்றின் முன் சைவத்திருவாளர் என்றும் இறுதியில் அவர்கள் என்றும் சேர்த்து வாசிக்கவும்.]

**தலைவர்**

பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார், மகிபாலன்பட்டி, இராமநாதபுரம் ஜில்லா.

**உதவித் தலைவர்கள்**

ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி. ஏ. எல். டி. எம். இ. எஸ்., தலைமையாசிரியர், போதனுமுறைப் பகுதி, அரசாங்கக் கல்லூரி, கோயம்புத்தூர்.

அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ., சொந்தக்காரர், ருக்மிணிகுக்கர் கம்பெனி, 5, தெற்கு மாதாகோவில் தெரு, இராயபுரம், சென்னை.

**பொதுக் காரியதரிசி**

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், பி. ஏ. பி. எல்., அட்வகேட், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

**வரவேற்புக் காரியதரிசி**

வ. பழ. சா. சாமிநாதன் செட்டியார், தலைவர், மேலைச்சிவபுரி சன்மார்க்கசபை, புதுக்கோட்டை ஸ்டேட்.

**உதவிக் காரியதரிசி**

பா. கந்தநரசிம்ஹம், பி. ஏ. பி. எல்., அட்வகேட், 6/7, தாதாமுத்தியப்பன் தெரு, சென்னை.

**பொருட்காப்பாளர்**

தி. க. சுந்தரம் பிள்ளை, 88, திருப்பள்ளித் தெரு, ஜி. டி. சென்னை.

**பத்திராசிரியர்**

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார் (காரியதரிசியின் விலாசம்)

**உதவிப் பத்திராசிரியர்**

திரு. வி. உலகநாத முதலியார், உரிமையாளர், சாது அச்சுக்கூடம், 12; கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

**ஏனைய நிருவாக சபை உறுப்பினர்கள், சென்னை**

1. கி. குப்புச்சாமி முதலியார், திருக்குறள் விளக்க ஆசிரியர், 3/2, பிள்ளையார் கோயில் தெரு, கிருஷ்ணாம்பேட்டை, திருவல்லிக்கேணி. P. O.
2. பாலி-சு. நெல்லையப்பர், ஆசிரியர் "லோகோபகாரி" சிந்தாதிரிப்பேட்டை.
3. நல். பாலசுந்தர முதலியார், பி. ஏ., பி. எல்., அட்வகேட், 28, நல்லதம்பி முதலி தெரு, இராயப்பேட்டை.
4. திண்ணை - தங்கவேல் முதலியார், 22, விநாயக மேஸ்திரி தெரு, ஜி. டி.
5. E. N. தணிகாசல முதலியார், பி. ஏ. பி. எல்., அட்வகேட், 412, ஹைரோட், திருவல்லிக்கேணி.
6. E. T. இராஜேசுவரியம்மாள், பி. ஏ., 412, ஹைரோட், திருவல்லிக்கேணி.
7. காழி - சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, பி. ஏ., 233, லிங்கசெட்டித் தெரு, ஜி. டி.
8. S. M. வேங்கடாசல முதலியார், 28, வீராசாமிப் பிள்ளைத் தெரு, எழும்பூர்.
9. தி. நல்லசிவன் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அட்வகேட், கச்சேரி வீதி, மயிலாப்பூர்.
10. C. S. சுவாமிநாத முதலியார், பி. ஏ., "தாரக விலாசம்" லாயிட்ஸ்ரோட்டு, கதீட்ரல் P. O.
11. ச. நடேச முதலியார், ஜவுளி வியாபாரம், பசார் ரோட், இராயப்பேட்டை.
12. புண்ணியம் செட்டியார், சொந்தக்காரர், கவுணியன் பிரஸ், பிராட்வே, ஜி. டி.

**மாதக் கணக்கு பரிசோதகர்**

க. இரத்தின முதலியார், 120, சூளை ஹைரோட், வேப்பேரி, P. O.

**ஆண்டுக் கணக்கு பரிசோதகர்**

வே. மாணிக்க முதலியார், 88, பெருமாள் முதலி தெரு, ஜி. டி. சென்னை.

### பத்திராசிரியக் கழகம் பணியாளர் கழகம்

1. மு. கதிரேசச் செட்டியார், மகிபாலன் பட்டி.
2. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, திருநெல் வேலி.
3. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, கோயம்புத்தூர்.
4. த. வே. உமாமகேசுவரம்பிள்ளை, தஞ்சை.
5. ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரிச்சி.
6. கே. ஆறுமுகம் பிள்ளை, நாகர்கோயில்.
7. அ. சோமசுந்தரம் செட்டியார், சென்னை.
8. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், சென்னை, பத்திராசிரியர்.
9. திரு. வி. உலகநாத முதலியார், சென்னை, உதவிப்பத்திராசிரியர்.

### ஆராய்ச்சிக் கழகம்

1. மு. கதிரேசச் செட்டியார்.
2. கா. சுப்பிரமணியம் பிள்ளை.
3. ந. மு. வேங்கடசாமி நாட்டார்.
4. தி. குப்புச்சாமி முதலியார்.
5. ச. சச்சிதாநந்தம் பிள்ளை.

### வெளியூர் ஆலோசனை சபை

#### செங்கல்பட்டு

1. க. சபாபதிமுதலியார், கட்டியாம்பந்தல்
2. கா. வேதாசலமுதலியார், காவித்தண்டலம்.
3. வா. தி. மாசிலாமணிமுதலியார், சீவரம்.

#### வட ஆறுகாடு

1. C. S. இராஜா பிள்ளை, வேலூர்.
2. நடேச செட்டியார், வேலூர்.
3. M. A. வேலாயுதமுதலியார், குடியாத்தம்.

#### தென் ஆற்காடு

1. தி. கு. தி. நாராயணசாமி நாயடு, திழக்குமருதூர்.
2. வை. கந்தசாமி முதலியார், திருப்பா திரிப்புலியூர்.
3. எம். சின்னசாமி ரெட்டியார், திரு வெண்ணெய் நல்லூர்.

#### தஞ்சாவூர்

1. த. வே. உமாமகேசுவரம்பிள்ளை, தஞ்சை.
2. அ. கந்தசாமிப்பிள்ளை, கும்பகோணம்.
3. வேலாயுதம் பிள்ளை, கொடவாசல்.

#### திரிசிராப்பள்ளி

1. ந. மு. வேங்கடசாமி நாட்டார்.
2. அ. மு. சரவண முதலியார், லால்குடி.
3. அமிர்தம் செட்டியார், பூவாளூர்.

#### இராமநாதபுரம்

1. ரா. கு. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.
2. கரு. முத்து. அழகப்ப செட்டியார், ஆ. தெற்கூர்.
3. காசிநாதன் செட்டியார், கொத்தமங்கலம்.

#### திருநெல்வேலி

1. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, திரு நெல்வேலி.
2. அ. முத்தையபிள்ளை, பாளையங்கோட்டை.
3. ந. சிவகுருநாதன் பிள்ளை, தூத்துக்குடி.

#### கோயம்புத்தூர்

1. சாத்தப்ப செட்டியார், கோயம்புத்தூர்.
2. T. R. இராஜரத்தினம் பிள்ளை, ஷை
3. C. M. இராமச்சந்திரன் செட்டியார்.

#### திருவநந்தபுரம்

1. கே. ஆறுமுகம் பிள்ளை, நாகர்கோயில்.

#### பெங்களூர்

1. வி. சே. ஆறுமுக முதலியார், நால்வர் பவனம், பெங்களூர்.

#### புதுக்கோட்டை

1. P. S. சிவஞானமுதலியார், அரசரிமைச் சங்க உறுப்பினர், புதுக்கோட்டை.
2. வ. ராம. இலக்குமணன் செட்டியார், M. L. C. வலம்புரி.

#### புதுச்சேரி

1. S. பழனிசாமிப் பிள்ளை, புதுவை.
2. S. P. அண்ணாமலை முதலியார், புதுவை.
3. திரங்தே. சிவசங்கர செட்டியார், புதுவை.

#### மதுரை

1. J. M. சோமசுந்தரம் பிள்ளை, மதுரை.
2. R. S. பதி, மதுரை.
3. கரிமுத்து - தியாகராஜ செட்டியார், மானேஜர், மீனாக்ஷிமில், மதுரை.

#### சேலம்

1. அ. வரதநஞ்சையபிள்ளை, தோரமங்கலம்.
2. பெரியண்ணன் செட்டியார், சேலம்.
3. A. மாணிக்க செட்டியார், செவ்வாய்ப் பேட்டை.

#### நீலகிரி

1. சாம்பசிவம் பிள்ளை, பி. ஏ. எல். டி. உதகமண்டலம்.
2. * * *

#### சித்தூர்

1, 2, 3. * * *

---

குறிப்பு:—* * * என்ற குறியிட்ட காலியிடங்கட்குத் தகுதியுள்ள சைவ உழைப்பாளிகள் பெயர்களை நமக்கு அன்பர்கள் குறித்தனுப்புமாறு வேண்டுகிறோம்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

# புதிய அமைப்பும் விதிகளும்

[1931ஆ பிப்ரவரிமீ 1உ வரை நிறைவேறியுள்ள திருத்தங்களோடு இவை வெளியிடப்படுகின்றன.]

## அதிகரணம் க.—அமைப்பும் அங்கத்தவரும்

1. இச்சமாஜத்தின் பெயர் "சைவ சித்தாந்த மகா சமாஜம்" என்பதாம். இது 1905ஆ ஜூலைமீ 7உ ஏற்படுத்தப்பட்டு 1915ஆ டிசம்பர்மீ 11உ ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி அஸிஸ்டென்ட் ரிஜிஸ்திரார் முன்னிலையில் நெ. S. 6 of 1915-1916 ஆக 1860ஆ 21ம் ஆக்ட் சொஸைடீஸ் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டுப்படி பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் தலைமைக் காரிய நிருவாக இடம் இப்போது சென்னையில் கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, 150-வது இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

2. இப்புதிய அமைப்பும் விதிகளும் புதுச்சேரியில் நடந்த சமாஜத்தின் 22-வது ஆண்டு நிறை விழாவில் 1928ஆ ஜனவரிமீ 1உ நிறைவேறி அன்று முதல் ஆட்சிக்கு வந்தன.

3. இச்சமாஜத்தின் தலையாய நோக்கமாவது சைவ சித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாத்திர முடிபுகளையும் பரவச்செய்தலேயாம். இக்கருத்து முற்றுப் பெறுமாறு கையாளப்படும் முறைகளுள் முக்கியமானவை கீழ்வருவனவாகும்:—

(i) ஆண்டுக்கு ஒரு முறை இந்தியாவின் எப்பகுதியிலேனும், இலங்கை, பர்மா, மலேயா முதலிய தமிழ் வழங்கும் நாடுகளிலேனும் ஒரு மகாஜனக்கூட்டம் நடத்தல்.

(ii) இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா முதலிய தேசங்களில் பல விடங்களில் பல சைவ சித்தாந்தக் கிளைச் சபைகளைத் தாபித்து நடத்தல்.

(iii) புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் முதலிய வெளியீடுகளை ஆங்கிலத்திலும் சுதேச மொழிகளிலும் இயற்றிச் சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் அவற்றிற்கு ஆதாவு புரியும் ஏனைய கருத்துக்களையும் பரவச் செய்தல், "சித்தாந்தம்" என்னும் திங்கள் தாள் நடத்தல்.

(iv) கருணை வள்ளல்களின் துணைகொண்டு ஆன்ற கேள்வியும் அகன்றகல்வியும் சான்ற நற்புலவர்களின் உதவியால் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றிற்கு ஆதரவு நல்கும் தேவாரத் திருமுறைகளையும் அச்சிட்டுக் கிறிஸ்தவ விவிலிய நூல் சங்கத்தாரைப்போல் பல்லாயிரக்கணக்கான பிரதிகளை அடக்க விலைக்கும் இயன்றவரை மாணவர்கட்கு இலவசமாகவும் வழங்குதல்.

(v) சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் ஏனைய சமயக் கொள்கைகளையும் அறியக்கூடிய புத்தகங்கள் முதலிய வெளியீடுகளைச் சேகரித்துப் புத்தகசாலை ஒன்றமைத்தல்.

(vi) பள்ளிக்கூடங்களில் நேராகவும் பிற சபைகள் மூலமாகவும் சமயபோதனை செய்தல்.

(vii) எளிய கீழ் வகுப்பினருக்கு அறத்தின் நெறி, சமயத்தின் இயல்பு முதலியவற்றை விளக்குதல்.

(viii) புறச் சமயத்தினின்றும் சைவ சமயம்புக விழைவோர்க்குத் தக்க வசதிகள் ஏற்படுத்தி அவர்களைச் சைவ சமயத்தில் சேர்த்துக் கொள்ளுதல்.

(ix) சமயம், கோயில், மடம் முதலியவற்றைக் காலத்தின் நிலைக்கேற்றவாறு அவற்றின் உயரிய உண்மை நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டுப் புதிய முறையில் சீர்திருத்தம் செய்தல்.

(x) கடவுள் ஒருவர் உண்டென்னும் கொள்கையையும் அருளொழுக்கத்தையும் பரப்புவதில் ஏனைய சமயிகளோடு ஒத்துழைத்தல்.

4. இச்சமாஜத்தின் அமைப்பு நிர்வாக சபை, பணியாளர் கழகம், ஆராய்ச்சிக் கழகம், வெளியூர் ஆலோசனை சபை, ஐவகை அங்கத்தினர் தொகுதி, மங்கையர் பகுதி ஆகிய இவைகளடங்கியதாகும்.

5. இச்சமாஜத்தின் ஐவகை அங்கத்தினர் போஷகர்கள் (patrons) கௌரவ அங்கத்தினர் (honorary members) ஆயுள் அங்கத்தினர் (life members) சாதாரண அங்கத்தினர் (ordinary members) மங்கையர் பகுதி அங்கத்தினர் (ladies section members) என்மனோரேயாம்.

6. இவர்களுள் போஷகர் என்போர் இச்சமாஜம் நடத்தும் "சித்தாந்தம்" பத்திரிகையின் ஒரு மாத இதழ் அச்சுக்கூலியையோ, அல்லது சமாஜத்தின் விசேஷ மகாநாடு, ஆண்டு விழா முதலியவற்றில் ஒன்றை நடத்தி வைக்கும் செலவையோ, அல்லது நூறு ரூபாய்க்குக் குறையாத தொகையையோ சமாஜத்துக்கு உதவும் புண்ணிய சீலர்களேயாவர்.

7. கௌரவ அங்கத்தினர் என்போர், சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகிப்போரும், சமாஜத்துக்கு உதவி புரிதல் நிமித்தமாக நிர்வாக சபையினரால் சிற்சில காலங்கட்கு மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவோருமாவர்.

8. ஆயுள் அங்கத்தினராவார், சமாஜத்திற்கு மொத்தமாகவோ சில பகுதிகளாகவோ

ரூபாய் இருபத்தைந்துக்குக் குறையாமல் உதவி புரிவோர்.

9. சாதாரண அங்கத்தவராவார், அவ்வப்போது குறிக்கப்படும் ஆண்டுச் சந்தாவைச் செலுத்துவோராவர். உள் நாட்டுத் தபால் விலாச முடையவர்களின் ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்றரையென்றும், வெளி நாட்டுத் தபால் விலாச முடையவர்களின் ஆண்டுச் சந்தா ரூபாய் இரண்டென்றும் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

10. நிர்வாக சபையினர் யாதொரு காரணமும் காட்டாமலே அங்கத்தினர் எவரையும் சமாஜத்தினின்றும் நீக்கிவிடத் தீர்மானிக்கலாம்.

11. இச்சமாஜத்தின் எவ்வகை அங்கத்தினராயினும், அவர்கள் இச்சமாஜத்தின் கூட்டங்கள் முதலிய நடவடிக்கைகளில் தீர்மானங் கொணரவும், தேர்தல் முதலியவைகளில் வாக்களிக்கவும், மற்ற நிர்வாக விஷயங்களில் கலந்துகொள்வதற்கும் கீ[illegible] உண்மைகளை ஒப்புக்கொண்டு அவைப[illegible] வகையில் நடந்துகொள்வது[illegible] களிலும் கூட்டங்களிலும்[illegible] லியன செலுத்துவதாகவு[illegible]பந்தல் களைப் பரப்புவதற்காக இய[illegible]ண்டலம். பதாகவும் உறுதிமொழி பக[illegible] படி கூறுகின்றவர்க்கே வாக்குரிமை யுண்டு; ஏனையோருக்கில்லை.

#### உண்மைகள்

(1) நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னும் கொள்கை இன்றியமையாதது. (2) சைவ சமயம், அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமுள்ளதாயும் அன்புநெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின், அஃது எக்காலத்துக்கும் எச்சமூக நிலைக்கும் இசைந்ததாயிருக்கிறது. (3) பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை, என்னும் முப்பொருள் உண்மையையும், அப்பதி சிவமே யென்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் இன்றியமையாத கோட்பாடாகும்; சைவ உணவு கொள்ளுதல் சிவ சின்னங்களணிதல் என்பவற்றோடு சரியை, கிரியை, யோகம், ஞானங்களில் அக்கோட்பாடுகட்கிசையப் பயிலுதல் சைவ சமயத்தின் இன்றியமையாத அநுட்டான மாகும். (4) சைவ சமயத்துக்குப் பிரமாண நூல்களாவன :—பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் அவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளுமாகும் (5) சைவ சமயிகள், சைவ சமயக் கோட்பாடுகளையும் அநுட்டானங்களையும் மறுக்காத எவ்வித ஆராய்ச்சியும் செய்தல் சைவ சமய விரோதமாகாது.

12. இவ்விதிகளுக்கு முரண்படாதவகையில் இச்சமாஜத்தின் அங்கத்தினருக்குச் சாதாரணமான சபைகளில் சாதாரண அங்கத்தினருக்குள்ள உரிமைகளும் கடமைகளும் உண்டு.

### அதிகரணம் ௨.—நிருவாக சபை

13. இச்சமாஜத்தின் காரிய நிருவாகத்தை முன்னின்று நடத்துபவர் காரிய நிர்வாக சபையினர். அவர்கள் ஒரு தலைவர், இரண்டு உதவித் தலைவர்கள், ஒரு பொதுக்காரியதரிசி, ஒரு வரவேற்புக் காரியதரிசி, ஓர் உதவிக் காரியதரிசி, ஒரு பொருட்காப்பாளர், ஒரு பத்திராசிரியர், ஓர் உதவிப் பத்திராசிரியர், பதினொரு அங்கத்தினர் ஆக இருபதின்மர் ஆவர்.

14. இவர்கள் சைவ சித்தாந்தக் கொள்கைகளும் சமயப்பற்றும் உழைப்பும் ஊக்கமும் உடையவர்களாகவும், 11-வது விதிப்படி வாக்குரிமை யுடையவர்களாகவும்இருத்தல்வேண்டும். ஓர் ஆண்டு நிறைவுவிழாவில் முதல் நாள் தலைமை வகிப்பவர் அடுத்த ஆண்டு

1. P. S. [illegible]விழா வரை சமாஜத்தின் தலைவரா

சங்க [illegible]ரவேற்புக் காரியதரிசி அடுத்த ஆண்டு

2. வ. ராம. [illegible]விழா நடக்கும் இடத்துறைபவராயும்,

M. L. [illegible]ழாநடத்தற்குரியஏற்பாடுகள்செய்பவரா[illegible] இருத்தல்வேண்டும். அவரும், தலைவரும், ஓர் உதவித்தலைவரும் நீங்கலாக ஏனைய நிருவாக சபையினர் சென்னை வாசிகளாயிருத்தல் வேண்டும். நிருவாகசபையினருள் யாராவது ஒருவர் இரண்டு பொறுப்புக்களை (காரியதரிசியும் பத்திராசிரியரும் எனபனபோல்) வகிக்கநேரின், சாதாரண நிருவாக சபையினர் தொகையை அதிகரித்து மொத்தமாக இருபதின்மர் இருக்கும்படி தேர்ந்தெடுக்க வேண்டும்.

15. இச்சமாஜத்தின்நோக்கங்கள், கொள்கைகள், நடைமுறைகள் முதலிய முக்கிய விஷயங்களை ஆலோசிப்பதற்கு மேற்படி நிர்வாக சபையினர் வெளியூர் ஆலோசனை சபையினரையும் பணியாளர் கழகத்தினரையும் கலந்து முடிவு செய்யவேண்டும். மற்றைய எல்லா விஷயங்களையும் தாங்களே தீர்மானித்து நடத்தவேண்டும்.

16. **பணியாளர் கழகம் (Working Committee)** இது 11-வது விதியிற் கண்ட இலக்கணங்களையுடைய ஒன்பதின்மர் அடங்கியது. இவர்கள் கூடியவரை தமிழ் நாட்டில் சைவ சித்தாந்தத் துறையில் பல்லாண்டுகள் உழைத்தவர்களாகவும் சமாஜத்துக்குப் பல வழிகளிலும் உதவி புரியும் தகுதியுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவர்களுள் குறைந்தது நால்வர் சென்னைமாநகருக்குப் புறம்பே வசிப்பவர்களாகவும், சமாஜப் பொதுக் காரியதரிசி, தாம் உத்தியோகம்



வகிக்கும்வரை (Ex Officio) இக்கழகத்தினருள் ஒருவராயும் இருத்தல் வேண்டும். இப்பணியாளர் கழகமே பத்திராசிரியக் கழகமாகவும் அமைந்து தொழிற்படும். இப்பணியாளர் கழகம், சைவ சித்தாந்த மகா சமாஜம் இணைக்கப்பட்ட சபைகளோடும் ஏனைய சைவ சபைகளோடும் ஒத்துழைக்கும் வழிகளையும் சமய சம்பந்தமான பெரும்பணி, சிறப்புப்பணி, முதலியவற்றை நடத்தும் முறைகளையும் அவ்வப்போது தீர்மானிக்கும். இக்கழகத்தின் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டே சமாஜமும் இணைக்கப்பட்ட சபைகளும் இவ்விஷயங்களில் நடந்துகொள்ள வேண்டும்.

17. **ஆராய்ச்சிக் கழகம் (Research Committee)** சைவ சமயிகளும் பிறரும் செய்யும் சமய ஆராய்ச்சிகளின் முடிபுகள் ஒப்புக்கொள்ளத் தக்கனவா அல்லவா என்று தீர்மானித்தற்பொருட்டு தகுதியுடைய சைவ அறிஞர்கள் ஐவரை சமாஜத்தினர் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்க வேண்டும். இவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் முடிபுகளை 'சித்தாந்தம்' பத்திரிகையின் மூலமாகவும் ஏனைய வழிகளிலும் அவ்வப்போது வெளி[illegible]வோர்கள்.

18. இச்சமாஜத்தின் வெளியூர் ஆலோசனை சபையினர் என்போர் ஆண்டுவிழா[illegible]களில் முதல் நாட்களில் தலைமை வகித்த[illegible]களும் தமிழ் வழங்கும் ஜில்லாக்கள்[illegible] வொன்றுக்கு மூன்று பிரதிநிதிகளாகத் தே[illegible]ர்ந்தெடுக்கப் படுவோருமாவர். இவர்கள் 11-வ[illegible] விதியில் கண்ட இலக்கணங்களையுடைய[illegible]ளாகவும் கூடியவரையில் கிளைச் சபைக[illegible] அல்லது சைவ சபைகளின் பிரதிநிதிகளாகவும் இருத்தல் வேண்டும்.

19. ஒவ்வோராண்டு நிறைவு விழாவிலும் நிருவாக சபையினர், பணியாளர் கழகத்தினர், ஆராய்ச்சிக் கழகத்தினர், வெளியூர் ஆலோசனை சபையினர், மாதக் கணித பரிசோதகர், ஆண்டுக் கணித பரிசோதகர் ஆகிய இவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். இவர்கள் அடுத்ததேர்தல்வரை உத்தியோகம் வகிப்பர். அதற்குள் [illegible]ராஜீநாமா, மரணம், விலக்கப்படுதல் முதலிய காரணங்களினால் இவர்களுள் ஏதாவது காலிஸ்தானம் உண்டானால் அந்த இடத்தில் தகுதியுள்ளவரை அடுத்த தேர்தல்வரை பணிசெய்வதற்கு நிருவாக சபையினரே தங்கள் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கவேண்டும்.

20. மூன்று மாதங்களில் நடைபெறும் நிருவாகசபைக் கூட்டங்கட்குத் தொடர்ச்சியாகத் தகுந்த காரணமின்றி ஒருவர் வாராமலிருந்தாலும், 11-வது விதியிற்கண்ட வாக்குரிமையை ஒருவர் எக்காரணத்தாலோ இழந்தாலும் நிருவாக சபையினின்றும் அத்தகையோரை விலக்குதற்கு அவைபோதிய காரணங்களாகும். மூன்று கூட்டங்கட்கு வாராமை யென்ற இவ்விதியின் பகுதி தலைவரையும் உதவித் தலைவரையும் நீக்குதற்குப் பயன்படாது.

### அதிகரணம் ௩.—உத்தியோகஸ்தர்களும் அவர்கள் பணியும்

21. **பொதுக்காரியதரிசி :** இவர் சமாஜத்தின் நிருவாக சபையின் சார்பாகப் பொதுவாக சமாஜத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்குரிய எல்லா வேலைகளும் செவ்வனே நடந்து வரும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது. இவ்விதிகளில் பொதுவாக 'காரியதரிசி' என்னும் சொல் சென்னையிலுள்ள பொதுக் காரியதரிசியையே குறிக்கும்.

22. சிறப்பாகக் கூட்டங்கட்குரிய ஏற்பாடுகள் செய்வது, சமாஜத்தின் கணக்குகள், தஸ்தவேஜிகள் முதலிய சகல சொத்துக்களையும் வைத்திருப்பது, பத்திரிகை முதலிய வெளியீடுகளை நடத்துவது, மற்ற உத்தியோகஸ்தர்களோடு கலந்து சமாஜ நிர்வாகத்தை நடத்துவது, ஏழாம் அதிகாரணத்திற் காணப்[illegible]றும் வேலைகளைப் பொருள் இயன்ற[illegible] நடத்த ஏற்பாடு செய்வது முதலிய[illegible]களை இக்காரியதரிசி ஏற்றவராவர்.

[illegible]த்தின் சார்பான எல்லா நட[illegible]ம், அழைக்கை, கடிதப் போக்கு[illegible]லியவைகளும் இக்காரியதரிசியின்[illegible]லயே நடத்தப்படும்.

[illegible] **வரவேற்புக் காரியதரிசி :** இவர் [illegible]த ஆண்டு நிறைவுவிழா நடத்தற்குரிய [illegible]லா ஏற்பாடுகளையும் செய்யும் பொறுப்[illegible]புடையவராவர்.

25. **உதவிக் காரியதரிசி :** இவர் வெளியிடல், அனுப்புதல் முதலிய பத்திரிகை சம்பந்தமான எல்லா வேலைகளையும் நடத்தும் பொறுப்புடையவர். சமாஜத்தின் நடவடிக்கைகளைப் பத்திரிகைகட்கு எழுதி யனுப்புதல் போன்ற விளம்பரப் பணி (publicity) இவருடையதாகும்.

26. **பொருட் காப்பாளர் :** இவர் சமாஜத்தின் வரவு செலவு கணக்குகளைச் சரியாக வைத்து, வரவேண்டிய பணத்தை வசூலித்துக் கொடுக்க வேண்டியவைகளைக் கொடுத்து உத்தியோகஸ்தர்கள் கையில் இவ்விதிகளின்படி இருக்கவேண்டிய தொகைகளைத் தவிர மற்றத் தொகைகளை இவ்விதிகளின்படி குறித்துள்ள வழிகளில் சேமித்து வைக்கும் பொறுப்புடையார்.

27. **மாதக்கணித பரிசோதகர் :** இவர் நிருவாக சபையிற் சேராதவரா யிருப்பினும் அச்சபையினர் இலக்கணம், தேர்தல், விலகுதல், முதலிய விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவர். இவர் ஒவ்வொரு மாதக்கணக்கையும் பரிசோதித்து மாதத் தொகுப்பேடு தயார்

செய்து தம்முடைய அபிப்பிராயத்தையும் தெரிவிக்கும் பொறுப்புடையார்.

**ஆண்டுக்கணித பரிசோதகர்:** இவர் மாதக் கணிதபரிசோதகரைப்போலவே தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டுக் கணக்கைப் பரிசோதித்து ஆண்டுத் தொகுப்பேட்டையும் தமது அபிப்பிராயத்தையும் தெரிவிக்கும் பொறுப்புடையவர்.

28. **பத்திராசிரியர்:** இவர் பத்திராசிரியக் கழகத்தின் கட்டளைக்குட்பட்டு பத்திரிகையை நடத்தும் பொறுப்புடையவர். சட்டப்படி பதிப்பாசிரியராக (publisher) அரசாங்க அதிகாரிகளின் முன்னர் உறுதிமொழி கூறி சட்டங்கட்கு முரண்படாத வகையில் ஒழுங்காகப் பத்திரிகையை நடத்துவது இவருடைய பொறுப்பாகும். உதவிப் பத்திராசிரியர்: இவருக்கு அச்சுத்தாள்களைத் திருத்துதல் முதலிய பல வழிகளிலும் உதவி புரியும் பொறுப்புடையவர்.

## அதிகரணம் ச.—பணமும் கணக்கும்

29. காரியதரிசி வைத்து வர வேண்டிய தஸ்தவேஜிகளும் புத்தகங்களும் கீழ் வருவன :—(i) அங்கத்தவர் பெயர், விலாசம் முதலிய விவரங்களடங்கிய புத்தகம். (ii) எல்லாக் கூட்ட நடவடிக்கைகளும் எழுதப்பட்டுள்ள புத்தகம். (iii) சமாஜப் பத்திரிகை முதலிய பிரசுரங்களின் பெயர், பிரதிகளின் எண் முதலிய விவரங்களடங்கிய புத்தகம். (iv) தபாற்செலவுப் புத்தகம் (v) அறிக்கைப் பத்திரங்கள், ஆண்டு விழா நடவடிக்கைகள் முதலியன. (vi) பொருட்காப்பாளர், கணித பரிசோதகர் முதலியோர் அனுப்பும் ரசீதுப் புத்தகங்கள், கணக்குகள், பற்றுச் சீட்டுகள் முதலியன.

30. பொருட் காப்பாளர் வைத்து வர வேண்டியன (i) தினசரி வரவு செலவு கணக்கு (ii) மெஷின் நெம்பரிட்ட கார்பன் டூப்ளிகேட் ரசீது பற்றுச் சீட்டுப் புத்தகம் (iii) அங்கத்தவர் சந்தா பாக்கி அறிவிக்கும் கணக்கு (iv) பாங்கி கணக்குப் புத்தகம் (v) பாங்கிச் செக்குப் புத்தகம்.

31. சந்தா, நன்கொடை முதலிய வழிகளால் கிடைக்கும் பொருள்களுக்கு, காரியதரிசி அவர்களே கைச்சாத்திட்ட பற்றுச்சீட்டுத்தரல் வேண்டும்.

32. பெற்றபணத்தை வாரத்திற் கொருமுறை காரியதரிசி பொருட்காப்பாளரிடம் சேர்ப்பித்து அவர் கைச்சாத்தைப் பெறல் வேண்டும்.

33. எதிர்பாராத செலவிற்காகக் காரியதரிசியிடம் நிலையாக முன்பணம் ரூபாய் 20 இருக்கலாம்.

34. முன் பணத்திலிருந்து செலவான தொகைகளுக்குக் காரியதரிசி யிடமிருந்து பற்றுச் சீட்டு பெற்றுக்கொண்டு பற்றுச் சீட்டில் கண்டதொகையைக் காரியதரிசிக்குப் பொருட்காப்பாளர் கொடுக்கவேண்டும்.

35. எல்லாச் செலவுகட்கும் பற்றுச் சீட்டுப்பெற்று, பொருட்காப்பாளருக்குக் காரியதரிசி அனுப்பிவைத்தல் வேண்டும்.

36. சந்தா நன்கொடை முதலியவைகளால் கிடைக்கும் தொகையில், நிருவாக சபையார் கட்டளையிட்ட செலவுக்கு வேண்டிய பணம் போக மிகுந்ததை உடனே சபையின் பாங்கிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

37. வேண்டும்போதெல்லாம் பணம்வாங்கவும், மறுபடியும் பாங்கியிலிடவும் தக்கபடி ஒரு பாங்கியை நிருவாக சபையார் குறித்து அப்பாங்கியில், அடிக்கடி வாங்கவேண்டிய பணத்தை தினசரி கணக்கிலும் (Current account) மற்றையதைக் கால அளவுக் (Fixed deposit) கணக்கிலும் வைக்கவேண்டும்.

38. சபையின் பணத்தை பாங்கியிலன்றி உறுப்பினர்களுக்காவது மற்றையோருக்காவது வட்டிக்குக் கொடுத்தல் கூடாது.

39. மாதக்கணக்கு இங்கிலீஷ் மாதமுடிவையும், ஆண்டின் கணக்கு நவம்பர் 30-ந் தேதியையும் முடிவாகக்கொள்ளல்வேண்டும்.

40. மாதாந்த வரவு செலவுக் கணக்குகள் மாதக்கணித பரிசோதகரால் கூடிய வரையில் மறுமாதம் 5-ந்தேதிக்குள் பரிசீலனை செய்யப்படவேண்டும்.

41. ஆண்டுக்கணித பரிசோதகரால் அவ்வவ் வருடத்திய வரவு செலவு கணக்குகள் டிசம்பர்மீ 10உக்குள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

42. மாதாந்த வரவு செலவுக் கணக்குகளை, விரிவாக வரவு செலவின் தலைப்பின்கீழ்க் குறித்துள்ள பத்திரம், காரியதரிசி, பொருட்காப்பாளர், மாதக்கணித பரிசோதகர் கையெழுத்துடன் மாதந்தோறும் நிருவாக சபையினர் முன்பு ஒப்புவிக்கப்படவேண்டும். அங்ஙனமே ஆண்டினிறுதிக் கணக்கும் தயாரிக்கப்படல் வேண்டும். இவைகள் கூடியவரையில் அவ்வப்போது "சித்தாந்தம்" பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும்.

## அதிகரணம் ரு.—கூட்டங்கள்

43. (i) கூடியவரை மாதந்தோறும் 10உக்குள் சமாஜ வரவு செலவுக் கணக்குகளைப் பார்வையிடுதற்கும் மற்ற விஷயங்களைக் கவனிப்பதற்கும் நிருவாக சபையினர் கூட்டம் காரியதரிசியால் கூட்டப்படல் வேண்டும்.

(ii) வாக்குரிமையுள்ள பொது வுறுப்பினர்களில் பதின்மரேனும், காரிய நிருவாக சபை



உறுப்பினர்களில் ஐவரேனும் ஏதேனும் ஒரு பொருளைக் கருத ஒரு நிருவாகக் கூட்டம் கூட்டவேண்டுமென்று காரியதரிசியை எழுதிக் கேட்பாராயின், அவ்வாறுகேட்ட 15நாட்களுக்குள் காரியதரிசி அக் கூட்டம் கூட்ட வேண்டும். அவர் தவறினால் உதவித் தலைவர் அத்தகைய கூட்டத்தைச் சேர்க்கக் கடவர்.

(iii) வாக்குரிமையுள்ள பொது வுறுப்பினர்கள் 25 பேர் கையொப்பமிட்டு ஒரு பொருளைக் கருத ஒரு பொது வுறுப்பினர் கூட்டத்தை விரும்புவராயின் அங்ஙனமே காரியதரிசியால் அக்கூட்டம் ஒரு மாதத்துக்குள் கூட்டப்படுதல் வேண்டும்.

44. (i) குறைந்தது ஐவராவது வந்திருந்தாலன்றி காரிய நிருவாக வுறுப்பினர் கூட்டம் நடைபெறாது. ஆனால் ஐவர் வாராமையால் நிறுத்திவைக்கப்பட்ட கூட்டம் மறுமுறை ஐவருக்குக் குறைந்த எண்ணிக்கையுள்ளோர் வந்திருந்தாலும் குறித்தகாலத்தில் கூட்டம் நடைபெறும்.

(ii) குறைந்தது 25பேர் வந்திருந்தாலன்றி பொது வுறுப்பினர் கூட்டம் நடைபெறாது.

(iii) நடைபெறாமல்நிறுத்திவைக்கப்பட்ட அப்பொதுக் கூட்டம் அடுத்தநாள் அதே யிடத்தில் அதே நேரத்தில் வந்திருப்பவர்களைக் கொண்டே நடைபெறும்.

45. சமாஜப் பொதுக் கூட்டங்களிலும், காரிய நிருவாக சபைக் கூட்டங்களிலும் நடக்கும் நடவடிக்கைகளை அதற்கென யேற்பட்டிருக்கும் குறிப்புப் புத்தகத்தில் காரியதரிசி எழுதி அக் கூட்டங்களின் தலைவர்கள் கையொப்பங்களைப் பெறவேண்டும்.

46. சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் நிகழ்த்தி, பொது மக்களுக்கு சமயவுணர்ச்சியை ஊட்ட, சென்னையின் பல பாகங்களிலும் கூடியவரையில் மாதந்தோறும் ஒரு பொதுக் கூட்டம் சேர்ப்பிக்கவேண்டும். இதுவன்றியும் முக்கியமான சமய சம்பந்தமான விஷயங்களைக் கருதவும் வேண்டும்போதெல்லாம் பொதுக் கூட்டம் சேர்ப்பிக்கலாம்.

47. சமய சம்பந்தமான விஷயங்களிலே யேற்படும் பொது நடவடிக்கைகளை ஆதரிக்கவோ, கண்டிக்கவோ, நிருவாக சபையார் தீர்மானித்தபடி பொதுக் கூட்டங்கள் சேர்ப்பிக்கலாம்.

48. வருடத்திற் கொருமுறை டிசம்பர் மாதம் 20-ந்தேதிக்கு மேல் அடுத்த ஜூன் மாதம் 30-ந்தேதிக்குள் நிருவாக சபையார் தீர்மானித்த ஓர் இடத்தில் ஒரு மகாநாடு (ஆண்டு நிறைவு விழா) நடத்தப்படும்.

49. அப்படிக்கூடும் மகாநாட்டுக்கு இரண்டு மாதம் முன்னமே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வரவேற்புக் கூட்டக்காரியதரிசி தொடங்கவேண்டும். எந்த ஊராரால் மகாநாடு கூட்டிவைக்கப்படுகிறதோ, அவ்வூராரால் எல்லாவிதச் செலவும் யேற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதுவன்றியும் நிருவாக சபையார் விசேஷ மகாநாடு கூட்ட வேண்டுமென்று கருதினால் அப்போதும் கூட்டுவிக்கலாம்.

## அதிகரணம் சு.—பத்திரிகை

50. இச் சமாஜத்தின் பத்திரிகையின் பெயர் 'சித்தாந்தம்" என்பதாகும்.

51. (i) பத்திராசிரியர், பத்திராசிரியக் கழகத்தின் கட்டளைக்குட்பட்டு பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், விரிவுரைகள் முதலியவைகளுக்கு உத்தரவாதியாவர்.

(ii) மாதந்தோறும் தவறாது பத்தாந்தேதி பத்திரிகை உறுப்பினர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(iii) பத்திரிகையைக் கால அளவைக்குள் யாவரும் பெறும்படி செய்வது உதவிக்காரியதரிசியின் பொறுப்பாகும்.

(iv) பத்திரிகையை வேறு கட்டணமின்றிப்பெறுதற்குச் சந்தாசெலுத்திய அங்கத்தவரெல்லாம் உரிமை யுடையோராவர். பத்திரிகையை யார் யாருக்கு இலவசமாக அனுப்புவது என்பதை நிர்வாக சபையினர் அவ்வப்போது தீர்மானிப்பர்.

(v) பத்திராசிரியர் தமது பார்வைக்கு அனுப்பப்படும் நூல்களையும் சமாஜப் பத்திரிகைக்குப் பதிலாக அனுப்பப்படும் மாற்றுப் பத்திரிகைகளையும் அவைகள் கிடைத்த ஒரு மாதங்கழித்து சமாஜப் புத்தகசாலைக்கு அனுப்பிவிட வேண்டும்.

(vi) பத்திரிகையைப் பெறுவதைக் குறித்துவரும் எல்லாவிதக் கடிதப்போக்குகளையும் காரியதரிசி கவனித்தல்வேண்டும். பத்திரிகையில்வரும் கட்டுரை விரிவுரை முதலியவைகளைப் பொறுத்தவரையில் பத்திரிகையின் ஆசிரியர் கவனித்தல்வேண்டும்.

## அதிகரணம் எ.—பொது வேலைகள்

52. நிருவாக சபையார் தீர்மானத்தின் பேரில் வேண்டும் போதெல்லாம் அன்று வெளியீடுகளும் சிறு புத்தகங்களும் சமயச் சார்பாக வெளியிடலாம்.

53. பள்ளிக்கூடங்களில் சமய போதனைகளைச் செய்வதற்குச் சம்பளம் கொடுத்தும் இலவசமாகவும் சொற்பொழிவாளர்களை நியமனம் செய்தலும், சமயவளர்ச்சிக்காகத் தங்கப்பதக்கம், புத்தகங்கள் முதலியவைகளைத் தகுதியோர்க்குப் பரிசாக அளித்தலும், கீழ்நிலையிலுள்ள மக்களுக்குச் சமயபோதனை செய்து அவர்களைச் சமநிலைக்கு உயர்த்தலும், புத்தகசாலை அமைத்தலும், சித்தாந்த சமயத்தில் ஈடுபட்டு உழைக்கும் மற்றச் சபைகளைச்

சேர்த்துக் கொள்ளலும், மற்றவைகளும் சமாஜம் செய்தற்குரிய வேலைகளாம்.

### அதிகரணம் ௮.—பொது

54. சமாஜத்தின் வேலையாட்கள் யாவரும் காரியதரிசியின் கட்டளைப்படி நடந்து, அவர் அதிகாரத்திற்குட்பட்டிருக்கவேண்டும். காரியதரிசி அவர்கட்கு அபராதம் விதிக்கவும், அவர்களை வைக்கவும், வேலையினின்று நீக்கவும் கூடும். வேலையினின்று நீக்கப்பட்டவர் நிர்வாக சபையாருக்கு மனுச்செய்து கொள்ளலாம். பொருட் காப்பாளர் தமது கணக்குப் புத்தகங்கள் முதலியவற்றைச் சரிவர வைப்பதற்குச் சமாஜலிகிதர் உதவி செய்ய வேண்டும்.

55. காரிய நிருவாக சபையாரும், அங்கத்தவர் பொதுக்கூட்டமும் செய்த தீர்மானங்களின்படி காரியதரிசி நடக்கக் கடமைப்பட்டுள்ளார். நிருவாக சபையார் அனுமதியைப் பெற வேண்டியனவும் அவர்கள் ஆலோசித்துத் தீர்மானம் செய்ய வேண்டியனவுமாயுள்ள விஷயங்கள் எல்லாவற்றையும் காரியதரிசி அச்சபையின் முன்னர் கொண்டு வருதல் வேண்டும்.

56. காரியதரிசியும் பொருட் காப்பாளரும் சமாஜத்தின் ஆண்டு அறிக்கைப்பத்திரத்தைத் தயார்செய்து ஆண்டுக்கணக்கு பரிசோதகர் அறிக்கையையும் சேர்த்து நிருவாக சபையார் உடன்பாடு பெறும்பொருட்டுக் கொண்டுவர வேண்டும்.

57. சமாஜத்திற்கு எவ்வாற்றானும்கிடைக்கும் வருமானத்தையும் சொத்தையும் இவ்விதானத்தில் விளக்கப்பட்டுள்ள சமாஜ நோக்கங்களை நிறைவேற்றுதற்காகவே உபயோகிக்கவேண்டும். அவைகளில் எவ்விதஅம்சத்தையும் சமாஜத்தின் அங்கத்தவர்களாய் அல்லது உத்தியோகஸ்தர்களாய் முன்னிருந்தோர், இப்போதிருப்போர், இனிச் சேர்வோர், இன்னோர் வாரீசுதாரர்கள் எனுமிவர்களில் எவர்களேனும் டிவிடெண்டு, போனஸ் முதலிய வழிகளாலாவது இன்னும் லாபம் பங்கிட்டுக் கொள்ளல் என்னும் முறையிலாவது எக்காரணம் பற்றியும், நேரே அவர்க்கெனப் பெற்றுக் கொள்ளவேனும், பிறர்க்குத் தரவேனும் உரிமையில்லை. ஆயினும் இந்த நிபந்தனைகள் சமாஜத்தின் உத்தியோகஸ்தர், அல்லதுவேலையாட்கள், பிற அங்கத்தவர், மற்றும் சமாஜத்தோடு சேர்ந்திராத பிறர் ஆகிய இவர்களில் எவர்க்கேனும் அவர் சமாஜத்தின் பொருட்டு மேற்கொண்ட உழைப்பிற்காக மனப் பூர்வமாகப் பிரதியுபகாரஞ் செய்தலைத் தடுக்கமாட்டா.

58. தமது பாது காப்பின் கீழ் வைக்கப்பட்ட மூலதனத்தை அல்லது வேறு விதமானபொருளை ஒழுங்கீனமாயும் அசாக்கிரதையாயும் பார்வையிட்டுச் செலவு செய்வதால் நேரிடும் நஷ்டத்திற்கும் ஷை பொருள்களின் அழிவிற்கும் தேய்விற்கும் நிருவாக சபையில் ஒருவரும் உத்தரவாதிகளாக மாட்டார்கள். ஆனால் எவரேனும் வேண்டுமென்று புத்தி பூர்வகமாகவோ ஒழுங்கீனமாகவோ முற்றிலும் அசாக்கிரதையாகவோ நடந்து முற்குறித்த நஷ்டம், பொருளழிவுக் குறைகளை உண்டாக்கினால் அவர் இவைகளின் சம்பவத்திற்கு நஷ்ட ஈடு செய்தற்குரியராவார்.

59. ஒருகால் இச்சமாஜம் கலைந்துபோக நேரிடின் அப்போது இதன் கடன் செலவுகள் முழுவதும் தந்தான பிறகு சமாஜ சொத்துக்கள் ஏதேனும் நிற்குமாயின், அவைகளைச் சமாஜ அங்கத்தவர்கள் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளலாவது அவர்களில் எவர்க்காவது கொடுத்துவிடலாவது கூடாது. அப்பொருளைச் சமாஜத்தின் நோக்கங்களையொத்த கருத்துகளைக் கொண்டொழுகும் வேறொரு சபைக்கோ அல்லது பல சபைகட்கோ கொடுத்துவிட வேண்டும். இவ்விஷயமானது இதற்கெனச் சேர்க்கப்பட்ட கூட்டத்தில் தாமே நேராகவோ அல்லது பிரதிநிதி மூலமாகவோ விஜயஞ் செய்துள்ள அங்கத்தவர் தருவதில் ஐந்தில் மூன்றிற்குக் குறையாத நியமச் சீட்டுகள் (vote) ஒருமித்துச்சொல்லும் வழி தீர்மானிக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடுகள் முடியாதொழிந்தால் அச்சமயத்து அவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டிய நியாயாதிபதி மேற்படி தீர்மானத்தைச் செய்ய வேண்டும்.

60. (i) இவ்விதிகட்குப் பொருத்தமாகக் காரிய நிருவாக சபையார் அவ்வப்போது அவசியமான உபவிதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(ii) இவ்விதிகள் ஆட்சிக்கு வந்தது முதல் பழைய விதிகள் நீக்கப்பட்டன. ஆனால் பழைய விதிகளின்படி அவை ஆட்சியில் இருந்தபோது செய்யப்பட்டன யாவையும் புதிய விதிகளின்படி செய்யப்பட்டனவாக ஒப்புக் கொள்ளப்படும்.

### அதிகரணம் ௯
### இணைக்கப்பட்ட சபைகள்

61. பதினோராவது விதியிற்கண்ட உறுதி மொழிக் கையொப்பம் செய்யும் எல்லாச் சைவ சபைகளும் சமாஜத்தோடு இணைக்கப் பெறும் உரிமை யுடையன.

62. அவ்வாறு இணைத்துக் கொள்வதால் சமாஜத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு மூன்று ரூபாய்க்குக் குறையாமல் இணைப்புச் சந்தா (affiliation fee) செலுத்தும் செலவைத் தவிர வேறு எவ்வகையிலும் தத்தம் சொத்து, வருவாய் முதலியவைகளிலுள்ள உரிமைகளை மேற்கூறிய சபைகள் இழக்கமாட்டா.



63. இணைக்கப்பட்ட சபைகள் சமாஜத்தோடு சேர்ந்து ஒத்துழைக்கும் வழிகளை அவ்வப்போது பணியாளர் கழகம் திட்டம் செய்யும்.

64. இணைக்கப்பட்ட சபைகட்கு "சித்தாந்தம்" பத்திரிகையில் ஒவ்வொருமாத யிதழின் பிரதியொன்றும், விலை குறிக்கப்படாத சமாஜ வெளியீடுகளின் பிரதிகளில் ஒவ்வொன்றும் அப்போதைக்கப்போது இலவசமாக அனுப்பப்படும்.

65. சமாஜத்தின் சார்பாக நடைபெறும் எல்லா மகாநாடுகளும் இணைக்கப்பட்ட சபைகளின் சார்பாகவும் நடப்பதாக அறிக்கை செய்யப்படும்.

### அதிகரணம் ௧௦.—மங்கையர் பகுதி

66. இது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இப் பகுதி பொதுவாக சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் நோக்கங்களைச் செயல் வகையில் கொண்டுவருவதற்கும் சிறப்பாக மங்கையருக்கு மொழிப்பயிற்சி, சமயக்கல்வி, கைத்தொழில் முதலியன கற்பித்தலுக்கும் உழைப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப் பகுதி சமாஜத்தின் கொள்கைகட்கும் நோக்கங்கட்கும் முரண்பட்ட வகையில் எவ்விதப் பணியும் இயற்றும் அதிகாரமுடையதன்று.

67. இம்மங்கையர் பகுதியின் ஆண்டுக் கூட்டம் ஒன்று ஒவ்வோர் ஆண்டிலும் டிசம்பர் மீ 20உ முதல் ஜனவரி மீ 30உ வரையுள்ள கால அளவையில் ஏதாவது ஒருநாள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டு விழாவை ஒட்டியோ அல்லது தனித்தோ நடைபெறும். அவ்வாண்டுக் கூட்டத்தில் மங்கையர் பகுதியைப் பற்றிய அறிக்கைப் பத்திரம், வரவு செலவு கணக்கு முதலியன அங்கீகரிக்கப் படுவதோடு அடுத்த ஆண்டு நிர்வாகசபையும் தேர்ந்தெடுக்கப்படும்.

68. இம்மங்கையர் பகுதியின் காரிய நிர்வர்த்தனை ஏற்று நடத்துவதற்கென 1 தலைவி, 2 காரியதரிசிகள், 9 நிர்வாகிகள் கூடிய பன்னிரு பெண்மக்களடங்கிய நிர்வாக சபையொன்று ஒவ்வோர் ஆண்டுக் கூட்டத்திலும் தேர்ந்தெடுக்கப் பட்டு அடுத்த ஆண்டுக் கூட்டம்வரை பணியியற்றும் பொறுப்புடையதாகும்.

69. இம்மங்கையர் பகுதியில் சேரவிரும்புவோர் இப்பகுதியின் காரியதரிசிகட்கு மனு செய்து கொள்ளவேண்டும். நிர்வாக சபையினர் யாதொரு காரணமுமின்றிச் சாதாரண அங்கத்தவரை நீக்கவும் சேர்க்கவும் அதிகாரமுடையவர்களாவர்.

70. இப்பகுதியின் அங்கத்தவர்கள் இருவகைப் படுவர். (i) ஆயுள் சந்தா ரூ. 25. செலுத்தும் பெண்மணிகள் ஆயுள் அங்கத்தவராவர். (ii) மாதம் ஒன்றுக்கு அணா நான்குக்குக் குறையாமல் சந்தா செலுத்தும் பெண்மணிகள் சாதாரண அங்கத்தவராவார்.

மூன்று மாதத்துக்குமேல் சந்தாவைச் செலுத்தாது, பாக்கி வைத்திருப்பவர்கள் இப் பகுதியிலிருந்து விலகிவிட்டவர்களாகக் கருதப்படுவர். அவர்கள் பிரவேசக் கட்டணம் அணா எட்டும் சந்தா பாக்கியும் கொடுத்தாலன்றி மீண்டும் சேருதல் கூடாது.

71. இப்பகுதியின் வரவு செலவு கணக்குகளைச் சரியாக எழுதி ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்குள் சமாஜத்தின் பொதுக்காரியதரிசிக்கு இப்பகுதியின் காரியதரிசிகள் அனுப்பிவிடவேண்டும்.

72. இப்பகுதியின் காரியதரிசிகள் ஒவ்வொருவரிடமும் இப்பகுதியைச் சேர்ந்த பொருள் ரூபாய் ஐந்துக்குமேல் ரொக்கமாகக் கையில் இருத்தல்கூடாது. இதற்குமேற்பட்ட தொகைகளையெல்லாம் சமாஜத்தின்பொதுக் காரியதரிசியிடம் சேர்ப்பித்து, வேண்டும்போது பற்றுச் சீட்டுகள் (Vouchers) கொடுத்துப் பெற்றுக்கொண்டு அவ்வப்போது செலவு செய்யவேண்டும்.

73. சாதாரணமாக மங்கையர்பகுதியின் நிர்வாகசபை ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை யன்று பிற்பகல் மூன்றுமணிக்குச் சமாஜ ஆபீசில் கூடும். ஒவ்வொரு நிர்வாக சபைக் கூட்டத்துக்கும் குறைந்தது நான்கு அங்கத்தினர் தேவை. மூன்று நிர்வாகசபைக் கூட்டங்கட்குத் தகுந்த காரணமின்றி தொடர்ச்சியாகவரத் தவறிய அங்கத்தினருக்குப் பதிலாக அவ்வப்போது வேறு தகுதியுடையவர்களை நிர்வாக சபையினர் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

74. மங்கையர் பகுதியின் சந்தா, நன்கொடை முதலிய பொருள் வருவாயெல்லாம் அப்பகுதியின் செலவுக்கென்றே ஒதுக்கி வைக்கப்படும். சமாஜத்தின் பொதுச் செலவுக்கு அதை உபயோகப்படுத்தல் கூடாது.

75. மங்கையர் பகுதியின் ஆயுள் அங்கத்தவர்கட்கெல்லாம் "சித்தாந்தம்" பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். ஏனையோர் பத்திரிகைக்காகத் தனிச்சந்தா ரூ. 1-8-0 ஆண்டு ஒன்றுக்கு முன்பணமாகச்செலுத்தினாலன்றி பத்திரிகையைப் பெறும் உரிமையுடையவர்களல்லர்.

76. இப்பகுதியின் மேற்கூறிய சிறப்பு விதிகளில் காணாத பல விஷயங்களில் சமாஜத்தின் பொது விதிகட்கு மாறுபடாதவகையில் இம் மங்கையர் பகுதி நடந்து கொள்ள வேண்டும்.

77. இப்பகுதியின் நிர்வாகத்தில் ஏதாவது சந்தேகங்கள் பிறந்தாலும் அல்லது நிர்வாக சபையினருக்குள் ஏதாவது வித்தியாசங்கள் நேரிட்டாலும் அவைகளை இப் பகுதியின் காரியதரிசிகள் சமாஜப் பொதுக் காரியதரிசிக்கு உடனே தெரிவிக்கவேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட விஷயங்களைப்பற்றி சமாஜத்தின் நிர்வாகசபை ஆலோசித்துமுடிவு செய்யும். அம்முடிவின்படி இம்மங்கையர் பகுதி நடந்துகொள்ள வேண்டும்.

78. இம்மங்கையர் பகுதி பெண்மக்களுக்கென்றே தனிமையாக ஏற்பட்டிருத்தலால், இதன் நிர்வாகம், கூட்டங்கள் முதலிய எவ்வித நடவடிக்கைகளிலும் மேற்கூறியவிதிகளுக்கு இணங்கிய வழிகள் நீங்கலாக ஏனையவழிகளில் ஆண்மகள் கலந்துகொள்ளுதல்கூடாது. ஆனால் இப்பகுதியின் தலைவியும், காரியதரிசிகளும் வேண்டிக் கொண்டால் அவர்கட்குத் தேவையுள்ள உதவியை ஆண்மக்கள் புரிதல் கூடும்.

79. இவ்விதிகள் சமாஜத்தின் விதிகளோடு அச்சிடப்பெற்று 1-4-1930 முதல்அமுலுக்கு வரும்.

80. இவ்விதிகளை மாற்றிக் கொள்வதற்கு இப்பகுதி தீர்மானித்து பிறகு சமாஜப் பொதுக் கூட்டத்தின் அனுமதியைப் பெறல் வேண்டும்.

### சமாஜத்தின் உப விதிகள்

மேலே கண்ட 60-வது விதியின்படி கீழ் வரும் உபவிதிகள் நிறுவப் பெற்றுள்ளன:—

1. 1927ஆண்டுக்கு முன் ஆயுள் அங்கத்தவராகச் சேர்ந்தவர்கள் 8 வது விதியின்படி ஆயுள் அங்கத்தவராகத் தங்களைச் சேர்த்துக் கொள்ளும்படி காரியதரிசிக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். காரியதரிசியும் தாம் அறிந்தவரைப் பழைய ஆயுள் அங்கத்தவர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

2. நிருவாக சபையில் உத்தியோகப் பொறுப்புடைய ஒருவர் அச்சபையின் விடை பெற்றுத் தகுந்த காரணங்கட்காகத் தம் பொறுப்பை ஏற்றுத் தம் கடமைகளைச் செலுத்தி வரும்படி மற்றொரு நிருவாகசபையினரை ஏற்பாடு செய்யலாம்.

3. சமாஜப் பொதுக்கூட்டங்கள், ஆண்டு விழா, விசேஷக் கூட்டம் முதலியவற்றைப் பற்றிய அறிக்கை கூடியவரை "சித்தாந்தம்" பத்திரிகையிலும் மூன்று தினசரிப் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும்.

4. பற்றுச் சீட்டுப் பெற முடியாத சந்தர்ப்பச் சில்லரைச்செலவுகட்கு (Petty Contingencies) காரியதரிசி தாமே செலவிட்டதாக உறுதி கூறித் தனிப்புத்தகத்தில் செலவெழுதிப் பொருட்காப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

5. மாதந்தோறும் பத்திரிகை வெளியிடும் செலவும், கூட்டங்கட்குரிய செலவும் 36-வது விதியின்படி நிர்வாக சபையார் கட்டளையிட்ட செலவுகளாகக் கருதப்படும்.

6. தற்போது சமாஜத்தின் பணம் வேளாள ஐக்கிய நாணய சங்கத்தில் வைக்கப்படவேண்டும்.

7. கால அளவைக் கணக்கில் (Fixed deposit) 37-வது விதியின்படி வைக்கும் பொருள், காரியதரிசி, பொருட் காப்பாளர், உதவித்தலைவர் ஆகிய மூவரும் கையெழுத்து செய்தாலன்றிக் கொடுக்கப்படாது என்ற நியமத்துடன் கட்டப்படவேண்டும். பணம் கட்டும் காலத்துள்ள மேற்கண்ட உத்தியோகஸ்தர்கள் பணம் பெறுங்காலத்து அவ்வுத்தியோகங்களை வகிக்காவிடில், வாங்கும் காலத்து அவ்வுத்தியோகங்களில் அமர்ந்துள்ளோரே அவ்விதம் கையெழுத்திட்டுப் பணம் வாங்கும் உரிமை யுடையவராவார்.

5. காரியதரிசி 43-வது விதியின்படி கூட்டும் நிர்வாகசபைக் கூட்டங்கட்கு மூன்று முழுநாள் (three clear days) முன்னதான அறிக்கையும் ஆண்டு நிறைவுவிழா, விசேஷக் கூட்டங்கள், தீர்மானங்களையும் விதிமாறுதல்களையும் நிறைவேற்றும் பொதுக் கூட்டங்கள் ஆகிய இவைகட்கு ஒரு வாரம் முன்னதான அறிக்கையும், ஏனைய கூட்டங்கட்குச் சமயோசிதம் போல் அறிக்கையும் செய்யவேண்டும்.

9. அவசர நிமித்தமாக நிர்வாக சபையின் அநுமதியைப் பெறுமல் அதை எதிர்பார்க்கு முறையில் முக்கியமான ஏற்பாடுகளையும் செலவுகளையும் காரியதரிசி செய்யலாம். பிறகு அவைகளை நிருவாக சபையினருக்கு அறிவிக்க, சாதாரணமாக அவைகளை அவர்கள் ஒப்புக் கொள்ளவேண்டும்.

10. ஆண்டுவிழா, பொதுக் கூட்டங்கள் முதலியவற்றைத் தெரிவிக்கும் அறிக்கையிலேயே எந்தக் காலத்துக்குள் தீர்மானங்கள், திருத்தங்கள் முதலியன காரியதரிசிக்கு அனுப்பப்படல் வேண்டும் என்ற குறிப்பும் அறிவிக்கப்படல் வேண்டும்.

# சமாஜக் கூட்டங்கள்

1. 1931௵ ஜனவரி௴ 9௳ மாலை 6 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் நிலையத்தில் சைவத்திருவாளர் T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையில் சமாஜத்தின் ஜனவரி மாதப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. பாளையங்கோட்டை சைவ சபைக் காரியதரிசியும் வழக்கறிஞருமான சைவத்திரு - அ. முத்தையபிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள், "திருநீலகண்ட நாயனார்" சரித்திரத்தின் நுட்பங்களை மிக அழகாக விளக்கி அரியதொரு செந்தமிழ்ச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். "இளமை மீதூரவின்பத் துறையினிலெளியரானார்" என்றும் "ஆனதங்கேள்வராங்கோர் பரத்தை பாலணைந்து நண்ண, மானமுன் பொருதுவந்த வூடலால்" என்றும் தெளிவுபடுத்திக்கூறும் சேக்கிழார் வாக்குக்கு மாறாக நாயனார் பரத்தை வீடு செல்லவேயில்லை என்ற முறையில் சில புராணிகர்கள் கதை சொல்வது பெருந் தவறென்றும், இச்சரிதையின் உயிர்ப் பகுதியைத் திரித்துக்கூறும் குற்றமுமாகுமென்றும், பரத்தை பாலணைந்து இன்பத்துறையில் எளியரானார் "மெய்யுறவணையும் போதில் தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று தம் மனைவியார் சொல்லக்கேட்டவுடனே, "எம்மை யென்ற தனால் மற்றை, மாதரார்தமையு மென்றன் மனத்தினுந் தீண்டேனென்றார்" எனச் சேக்கிழார் கூறியதின் நுட்பத்தையும் அத்தகைய உறுதியின் மாண்பையும் அப்புராணிகர்கள் உணரவேண்டுமென்றும் நன்குவிரித்துரைத்தனர். தலைவர் அவர்களும் சொற்பொழிவின் சாரத்தைத் திரட்டி முடிபுரை கூறினார்கள். இறுதியில் காரியதரிசி நன்றி கூறியவுடன் கடவுள் வாழ்த்தொலியுடன் சபை கலைந்தது.

2. 1931௵ ஜனவரி௴ 25௳ மாலை 4 மணிக்குச் சமாஜக் காரியாலயத்தில் "திருவாசகம் நுண்மைபயில் கழகம்" (Tiruvachakam study circle) தொடங்கப் பெற்றது. சென்னையிலுள்ள சைவத்துறையில் உழைக்கும் சிலர்களும் பேரறிஞர்களும் ஒருங்கே குழுமியிருந்தனர். சைவத் திருவாளர் T. K. சிதம்பரநாத முதலியார், பி. ஏ., பி. எல். அவர்கள் இக்கழகத்துக்குத் தலைவராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்துவதாக முன்னறிவித்தபடியே திருவாசகத்தின் அருமை பெருமைகளை முதன்முதலாக எடுத்து விளக்கினார்கள். பெரிய நூல்களுக்குப் பழைய உரைகள் வெளிப்பட்டுவிட்டால் அவ்வுரைகட்கு முழு அடிமையாய் அந்நூல்களின் நுட்பங்களைப் பயில்வதில் சிறிதும் தங்கள் கூர்ந்த அறிவைச் செலுத்தாதொழிவதே தமிழறிஞர்களின் தற்கால முறையாக வுள்ளதென்றும் இது பரிதபிக்கத் தக்க நிலைமை யென்றும், இக்குறைபாடு நேராவண்ணம் "திருவாசகம்" என்ற பொக்கிஷத்துக்கு உரை யெழுதாது விடுத்த பழைய உரையாசிரியர்கட்கு நந்தமிழ்நாடு பெரிதும் நன்றி கூறவேண்டுமென்றும் அவர்கள் விளக்கினார்கள். எல்லாச்சமயங்களிலும் பொதுவாகவுள்ளபகுதிகள் பல்லாயிர வருடங்கட்கு முன்னரே ஒவ்வொருசமயத்திலும் தோன்றினவென்றும், அவற்றை விளக்கி மக்கள் வாழ்க்கையிற் கொண்டுவரும் வழிகளைத் தேடுங்காலையில்தான் சமயத்துக்குச் சமயம் உயர்ந்தது தாழ்ந்தது என்ற வேறுபாடு தோன்றுமென்றும், சைவசமயம் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே சொந்தமானதென்றும், சைவ சமயத்தை விளக்கி அதன் உண்மைகளை நாடோறும் வாழ்க்கையிற் பதித்தொழுகுதற்குத் தமிழ் மொழியைப்போல் வேறெம்மொழியும் தொண்டுபுரியவில்லை யென்றும், சிறப்பாகத் தமிழ் மொழியிலும் திருவாசகத்தைப் போல் வேறெந்த நூலும் அத் தொண்டுபுரியவில்லை யென்றும் விளக்கிக் கூறினார்கள். பிறகு திருவாசகத்திலுள்ள சொற்றொடர்கள் பல நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமான புதிய புதிய பொருள்களை நல்குவது அதிசயிக்கத் தக்கதென்றும், உதாரணமாக "ஒழிவற நிறைந்த ஒருவபோற்றி" என்ற போற்றித் திருவகவல் அடியொன்றில் மேல்நாட்டு அறிவியல் ஆராய்ச்சியில் பொருளாக்கத்தைப் பற்றிய (Constitution of matter) உண்மைகளனைத்தையும் வருவித்துப் பொருத்தி அவற்றால் வரும் இன்பச் சுவையை நுகரலாம் என்றும் அனுபவித்துக் கூறினார்கள். இத்தகைய வின்பம் மொழி பெயர்ப்பில் ஒருபோதும் நுழைய முடியாதென்றும் ஒவ்வொரு மொழிக்கும் நாகரிகத்துக்கும் சிறப்பாகப் பலவகையான தனி யின்பங்கள் உண்டென்றும், உதாரணமாக "Hip hip hurrah" என்பதை வெள்ளைக்காரனும் "ஹரஹரமகாதேவ" என்பதைச் சைவனும் அனுபவிப்பதுபோல் வேறெவனும் அனுபவிக்க முடியாதென்றும் கூறினார்கள்.

இறுதியில் திருவாளர்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், தெ. பொ. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை, எஸ். வையாபுரி பிள்ளை ஆகிய மூவரும் இக்கழகத்தின் நோக்கம், நடைமுறைச் சிறப்பு முதலியனபற்றித் தங்கள் கருத்துக்களையும் அநுதாபத்தையும் தெரிவித்தார்கள். வந்தனை, வாழ்த்து முடிந்தவுடன் சபை கலைந்தது. இக்கழகம் பதினைந்துநாளுக்கு ஒருமுறை கூடித் திருவாசகத்தின் நுண்பொருள்களைப் பயிலும். அடுத்த இரண்டு கூட்டங்களின் விவரங்கள் அடுத்த யிதழில் வெளிவரும். கூட்டங்கள் நடைபெறும் காலம் இடம் முதலிய விவரங்கள் தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும்.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 2.

# சமாஜ அறிக்கைகள்

1. சென்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் "சித்தாந்தம்" பத்திரிகையில் அறிக்கை செய்தபடி, 1930௵ டிசம்பர்௴ 31உக்குள் தங்கள் சந்தாவைச் செலுத்தாத . அங்கத்தினர்க்கெல்லாம் 1931௵ ஜனவரி௴ 10உ அன்று வி. பி. அனுப்பப்பட்டது. வி. பி. அனுப்பப்பட்ட பின்னர் சிலருடையசந்தா, மணியார்டர்மூலம் கிடைத்தது. அவ்வன்பர்கள் 31-12-1930 குள் மணியார்டர் செய்திருப்பின் நமக்கு 10-1-1931க்குள் கிடைத்திருக்கும். அவ்வாறு செய்யாததினால் சமாஜத்துக்குரிய சந்தா கிடைத்ததெனினும் வி.பி. தபாற்கூலி ஒவ்வொருவருக்கு 0-2-3 வீதம் நஷ்டமாயிற்று. சந்தாவைமட்டும் மணியார்டர் செய்து வி. பி.யை மறுத்துவிட்ட அன்பர்கள் அம்மறுப்பினாலேற்பட்டுள்ள நஷ்டத்தை உளங்கொண்டு 0-2-3 தபால் பில்லைகளை சமாஜத்துக்கனுப்பித் தங்கள் சமயப்பற்றையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஜனவரிமாத இதழ் அவர்கட்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் மூவாயிரம் பிரதிகளை அச்சிட்டு அடக்கவிலைக்கு வெளியிடுதற்குரியவேலை தைப்பூச நன்னாளில் தொடங்கப்பெற்றது. சுவாமிகள் திருநக்ஷத்திரமாகிய வைகாசி மூலத்தன்று ஆச்சாபுரம் என வழங்கும் திருநல்லூர்ப் பெருமணத்தில் சமாஜத்தின் சுத்தப்பதிப்பாகிய இவ்வெளியீடு சுவாமிகள் திருவடிக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும். கலிக்கோ கட்டிடம் செய்த பிரதி ஒன்றின்விலை ஒருரூபா என்று குறிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## வடலூரில் சமாஜக் கூட்டம்

3. 1831௵ பிப்ரவரி௴ 2-ந்தேதி தைப்பூசப் புண்ணிய தினத்தில் வடலூரில் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் சத்தியதர்ம சாலையில் நமது சமாஜத்தின் விசேஷ மகாநாடு ஒன்று நடைபெற்றது. இராமலிங்க அடிகளின் திருவருளையே தலைமையில் இருத்திச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. காரியதரிசி முன்னுரையாகச் சில கூறியபின்னர் வாலாஜாபேட்டை ஸ்ரீமதி சாது நரசிம்ஹம்மாள் அவர்கள் "ஜீவகாருண்யம்" என்பதுபற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். காரியதரிசியார் இப்பொருள்பற்றி இராமலிங்க அடிகள் எழுதியுள்ள பல விஷயங்களை நினைவூட்டினர். பிறகு படைவீடு ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரமத்தைச் சேர்ந்த உயர்திரு. கிருத்திகாநந்த சுவாமிகள் "அருட்பெருஞ்சோதி" என்பதுபற்றி ஒரு சொற்பெருக்கு நடத்தினார். காரியதரிசியார் "அருட்செருஞ்சோதி" என்ற சொற்றொடர் பதிந்துள்ள அரியவுண்மைகளை மிகச் சுருக்கமாகக் கூறி, இம்மகாநாடு நடைபெறுதற்கு வசதிகள் செய்துதவிய திருவாளர்கள் தி. கு. கி. நாராயணசாமி நாயடு, பு. வே. தேவராஜ முதலியார் அவர்கட்கும் சத்திய தர்மசாலை யதிபர்க்கும், குழுமிய அன்பர்கட்கும் நன்றி கூறினர். பிறகு கடவுள் வாழ்த்துடன் சபை கலைந்தது.

---

திரு. அமைச்சரவர்கள், சைவசித்தாந்த மகா சமாஜம்,

அன்புடையீர்! [illegible]வும். சென்னை.

பூசப்பெரு நாளன்று வடலூரில் நடைபெறும் மகாசமாஜ விசேஷ மகாநாட்டு அழைப்பு வந்தது. யான் வந்து அன்பர்களுடன் கலந்து இன்புறப் பெரிதும் விழைந்தேன். இங்குள்ள உலகியற் செயல்கள் தடைப்படுத்தின. இறைவனைப்பற்றித் தேனொழுக்குப் போன்ற கனிவு மிக்க மதுரப்பாடல்களை மனம் உருகிப் பாடியருளிய பேரன்பராகிய இராமலிங்க அடிகளின் ஞானவாழ்க்கை நிலவிய புண்ணியத் தலமாகிய வடலூரில் பூசப்பெரு நாளில் சைவ சித்தாந்த மகாசமாஜ விசேட மகாநாடு நடைபெறுதல் தக்கதே. ஆங்குக் கூடும் அன்பர்கள் ஆரவார முதலியன இன்றி உண்மையான அன்புத் தொண்டியற்றும் குறிக்கோளுடையாராக விளங்குவர். அவர்கள் நல் உளங்கொளச் சைவவுண்மைகள் வெளிப்படுதல் மிகவும் நன்றாம். * * * என் பருவுடம்பு ஈண்டுறினும் நுண்ணுடம்பாகிய உள்ளம் நம்மனோர் இடைபட்டு அங்கல்லின்பந் துய்க்கும் என்பதிற்றடையில்லை.

* * * இயற்றுவிக்கும் நண்பர் திரு. நாராணசாமி நாயுடு அவர்கள் முதலிய உபகாரிகளுக்கும், குழீஇக்கேட்டின்புறும் பெரியார்களுக்கும் எல்லா நலங்களையும் இறைவன் அருளிக் காப்பாராக. * * *

அன்பன்,

30-1-1931. மு. கதிரேசன்.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.